Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, AUGUST 22 2025

வெள்ளிக்கிழமை 22, ஒகஸ்ட் 2025 | ஒளி: 11 கதிர் 034 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE






செம்மணி சிந்துபாத் மனிதப் புதைகுழிகளுக்கு

# சர்வதேச நீதி விசாரணை வேண்டும்

**ரவிகரன் வலியுறுத்தல்: லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவிடம் சாட்சியம் பெறுமாறு கோருகிறார்**

செம்மணி மனித புதைகுழியில் இனங்காணப்பட்ட எலும்புக்கூட்டு தொகுதியில் பெரும்பாலானவை நிர்வாணமாக்கப்பட்டு புதைக்கப்பட்டவை என நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வர பட்டுள்ளமையால், இந்த விவகாரத்துக்கு சுயாதீன சர்வதேச நீதி விசாரணை தேவை என தமிழரசுக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இந்த விசாரணையில், லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவின் சாட்சியங்களும் பெறப்படவேண்டும் என தமிழரசு கட்சியின் வன்னி மாவட்ட எம்.பி.துரைராசா ரவிகரன் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை(21) அன்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

செம்மணி மனித புதைகுழியில் இனங்காணப்பட்ட 147 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகளில் 90 வீதத்திற்கும் அதிகமானவை நிர்வாணமாக்கப்பட்டு புதைக்கப்பட்டவை எனக் கடந்த 14ஆம் திகதி சட்ட வைத்திய அதிகாரியால் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

இதன்மூலம் அங்கு பாரிய குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ளமை அம்பலமாகியிருக்கிறது என்றார்.

செம்மணி சிந்துபாத்தி மனித புதைகுழி அகழ்வாய்வில் சர்வதேச கண்காணிப்பு அவசியம் என்பதை வலியுறுத்துவதோடு, சர்வதேச நிபுணத்துவம் பின்பற்றப்பட்டு அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அத்தோடு, செம்மணி அகழாய்வுப் பணிகளுக்குரிய தொழில்நுட்பம் சார் நிபுணத்துவத்தை வழங்குவது தொடர்பில் ஆராய்ந்து வருவதாக பிரித்தானியாவின் வெளியுறவு மற்றும் அபிவிருத்தி விவகாரங்கள் இராஜாங்க செயலாளர் டேவிட் லமி அண்மையில் தெரிவித்துள்ளார். அவரின் இக்கருத்தினை வரவேற்பதுடன்,அவருக்கு எனது நன்றிகளையும் தெரிவித்து கொள்கிறேன்.

செம்மணியில் எலும்புக்கூடுகளை அடையாளம் காணும் பணி தொடர்பான விசாரணைகளில் வாக்குமூலங்களை அளிக்க வரும் மக்கள் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினரால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். தொடர்ச்சி P2

# புகார்களை ஏற்றல் ஆரம்பம்

விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம் மற்றும் ஸ்ரீலங்கன் விமான சேவை ஆகியவற்றில் நடந்த ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகள் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசேட விசாரணைக் குழு, பொதுமக்களின் முறைப்பாடுகள், கருத்துகள் மற்றும் ஆலோசனைகளைக் கோருகிறது.

விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம் மற்றும் ஸ்ரீலங்கன் விமான சேவை ஆகியவற்றில் கடந்த காலங்களில் நடந்த ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகள் குறித்து ஆராய்வதற்கு நிறுவப்பட்ட ஜனாதிபதி விசேட விசாரணைக் குழு, பொதுமக்களிடமிருந்து முறைப்பாடுகள், கருத்துகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற எதிர்பார்க்கிறது. தொடர்ச்சி P2

# ஜனாதிபதியுடன் ஆயர்கள் சந்திப்பு



கொழும்பு உயர் மறை மாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் கத்தோலிக்க ஆயர்கள் பேரவையினர் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவை புதன்கிழமை(20) பிற்பகல் சந்தித்தனர்.

வருடத்திற்கு மூன்று முறை நடைபெறும் கத்தோலிக்க ஆயர்கள் பேரவையில் கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள் குறித்து கர்தினால் ஆண்டகை, ஜனாதிபதிக்கு விளக்கினார்.


மேலும், கத்தோலிக்க சபையில் எழுப்பப்பட்ட கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகள் குறித்தும் இந்தக் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் தலைவர் அருட்தந்தை ஹெரல்ட் அந்தோணி பெரேரா மற்றும் பேரவையின் உறுப்பினர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# “நாணயத்தாள்களை அச்சிட அவசியமில்லை”



சுங்கத்திணைக்களத்திடம் இருந்து 2025ஆம் ஆண்டு 2,150 பில்லியன் ரூபாய் வருமானம் எதிர்பார்க்கப்பட்ட நிலையில் 1,316 பில்லியன் ரூபாய் இலாபமடைந்துள்ளது என தெரிவித்த தொழில் அமைச்சரும், பொருளாதார திட்டமிடல் பிரதி அமைச்சருமான அனில் பெர்னாண்டோ, எனவே, நாணயத்தாள்களை அச்சிட்டு வரவு-செலவு திட்டத்தின் பற்றாக்குறையை முகாமைத்துவம் செய்யப்போவதில்லை என்றார். தொடர்ச்சி P2



# கந்தனுக்கு அரோகரா...

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் தேர்த்திருவிழா வியாழக்கிழமை (21) அன்று வெகுசிறப்பாக நடைபெற்றது.

# தென்னகோனுக்கு விளக்கமறியல்



குற்றப் புலனாய்வுத் துறையால் (CID) புதன்கிழமை (20) கைது செய்யப்பட்ட முன்னாள் பொலிஸ் மா அதிபர் (IGP) தேசபந்து தென்னகோனை ஆகஸ்ட் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கோட்டை நீதவான் நிலுபுலி லங்காபுர வியாழக்கிழமை (21) அன்று உத்தரவிட்டுள்ளார்.

இவர், 2022 மே 9, அன்று காலி முகத்திடலில் உள்ள “கோட்டா கோ கம” போராட்டக் களத்தின் மீதான தாக்குதல் தொடர்பான விசாரணையுடன் தொடர்பு பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் நடந்த நேரத்தில், தென்னகோன் மேற்கு மாகாணத்திற்கான காவல்துறை துணைத் தலைவராக (DIG) பணியாற்றி வந்தார், பின்னர் இந்த வழக்கில் சந்தேக நபராகப் பெயரிடப்பட்டுள்ளார். தொடர்ச்சி P2

# டயானாவுக்கு பிடிவிறாந்து



குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டத்தை மீறி, தவறான தகவல்களைச் சமர்ப்பித்து வெளிநாட்டு கடவுச்சீட்டுகளைப் பெற்று, செல்லுபடியாகும் விசா இல்லாமல் இலங்கையில் தங்கியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் டயானா கமகேவை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி ஜெயதுங்க வியாழக்கிழமை (21) பிடிவிறாந்து பிறப்பித்தார். டயானா கமகேவின் பிணையாளர்களுக்கும் நோட்டீஸ் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2

நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு

# அரசாங்கம் அஞ்சுவது ஏன்?



பாராளுமன்றத்துக்கு நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவரும்போது, அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதிக்காமல் நிராகரிப்பதற்கான தேவை இந்த அரசாங்கத்துக்கு இருக்கிறது என ஐக்கிய மக்கள் சக்தி எம்.பியான. அஜித் பி பெரேரா தெரிவித்தார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான சாட்சிகளை மறைத்தார், தொடர்ச்சி P2

# “OT அதிகரிக்கப்படாது: விரல் ரேகை கட்டாயம்”



மேலதிக நேர கொடுப்பனவு (OT) அதிகரிக்கப்படாது. மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் விரல் ரேகை ஸ்கேனர் இயந்திரம் நிச்சயம் பொருத்தப்படும். அரசியல் நோக்கத்துடனான போராட்டத்துக்கு நாம் ஒருபோதும் அடிபணிய மாட்டோம் என சுகாதாரம் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (21) அன்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.எம். தொடர்ச்சி P2

# ரணிலுக்கு அழைப்பாணை



அரசாங்கப் பணத்தில் நிதியளிக்கப்பட்டதாகக் கூறப்படும் வெளிநாட்டுப் பயணம் தொடர்பான விசாரணை தொடர்பாக, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (CID) முன் வெள்ளிக்கிழமை(21) அன்று ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

இந்த விசாரணை, விக்ரமசிங்கவின் நியூயோர்க்கிற்கும் பின்னர் லண்டனில் நடந்த பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்ட ஐக்கிய இராச்சியத்திற்கும் சென்றது குறித்து கவனம் செலுத்துகிறது.

லண்டன் பயணத்தின் ஒரு பகுதி தனிப்பட்ட காரணங்களுக்காக இருந்தது. தொடர்ச்சி P2

எஸ்.ஐயின் சிம் கார்டை

# திருடி பணத்தை கறந்த எஸ்.ஐ. கைது

கிளிநொச்சியில் உள்ள அரவில் நகர் காவல் சிறப்பு அதிரடிப்படை முகாமின் பயிற்சி உப-பொலிஸ் பரிசோதகர் (எஸ்.ஐ), உப-பொலிஸ் பரிசோதகரின் சிம் கார்டை திருடி, வங்கிக் கணக்கு மற்றும் கிரெடிட் கார்டில் இருந்து ரூ.138,472 எடுத்த குற்றச்சாட்டில் பயிற்சி உப-பொலிஸ் பரிசோதகர் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர். புகார்தாரரும் சந்தேக நபருமான பயிற்சி உப-பொலிஸ் பரிசோதகர் ஒரே முகாமில் பணிபுரிகின்றனர், மேலும் புகார்தாரரின் சிம் கார்டை சந்தேக நபரான பயிற்சி உப-பொலிஸ் பரிசோதகரே திருடிவிட்டதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சர்வதேச நீதி...

இவ்விடயம் தொடர்பில் கடந்த 14ஆம் திகதி சட்டத்தரணிகளான எம்.ஏ.சுமந்திரன், கே.குருபரன், வி.மணிவண்ணன் ஆகியோரால் நீதிமன்றிலும் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 1999இல் யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோர் குறித்து விசாரிக்க இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவால் கலாநிதி தேவநேசன் நேசையா தலைமையில், கே.எச்.கமிலஸ் பெர்னாண்டோ, ஜெஸிமா இஸ்மாயில், சி.எம். இக்பால் ஆகிய நால்வர் அடங்கிய விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. குறித்த விசாரணைக் குழுவினால் 210பக்கங்களைக்கொண்ட நீண்ட விசாரணை அறிக்கை கடந்த 2003 அக்டோபர் 28ஆம் திகதி வெளியிடப்பட்டது. அவ்வறிக்கையில் காணாமல் போனவர்களில் பெருமளவானோர் இராணுவத்தினால் கொல்லப்பட்டிருக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளதுடன், படுகொலையுடன் தொடர்புடைய இராணுவ முகாம்கள், இராணுவ அதிகாரிகள், இராணுவத்தினரின் பெயர்களும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

எனவே, இந்த மனிதப் புதைகுழி விசாரணைகள் மும்முரமாக இடம்பெறும்போது அந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய படையினர் தப்பியோட வாய்ப்புள்ளது. ஆகவே, அதற்கு முன்னர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கடந்த 1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் செம்மணி இராணுவ சோதனைச் சாவடியில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் குற்றவாளிகளாக இனங்காணப்பட்ட இராணுவ லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ உட்பட ஆறு இராணுவத்தினருக்கு ட்ரயல் அட்பார் நீதிமன்றம் கடந்த 1998ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 3ஆம் திகதி மரண தண்டனை வழங்கியிருந்தது. நீதிமன்றத்தின் இந்தத்தீர்ப்பையடுத்து, இராணுவ லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ செம்மணியில் 300 தொடக்கம் 400 வரையான மக்கள் கொன்றுகுவிக்கப்பட்டதாக நீதிமன்றில் தெரிவித்திருந்தார்.

இவ்வாறு சோமரத்ன ராஜபக்ஷ நீதிமன்றில் சாட்சியமளித்ததற்கமைய அப்போது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள், அதனைத்தொடர்ந்து, செம்மணியில் முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப்பணிகளில் 15 எலும்புக்கூட்டுத் தொகுதிகளும் மீட்கப்பட்டிருந்தன. பின்னர் இந்த விசாரணைகள் கொழும்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டதைத் தொடர்ந்து இது தொடர்பான வழக்கு விசாரணைகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

இந்நிலையில், இராணுவ லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ அப்போது நீதிமன்றிற்கு வழங்கிய சாட்சியத்தை ஆதாரம் படுத்தும் வகையில் தற்போது செம்மணியில் மனித எலும்புக்கூடுகள் மிக அதிகளவில் இனம் காணப்படுகின்றன. எனவே, குறித்த வழக்கு மீள எடுத்துக்கொள்ளப்பட்டு தற்போதைய மனிதப் புதைகுழி வழக்குடன் தொடர்புபடுத்தப்பட வேண்டும். யாழ். நீதவான் நீதிமன்ற வழிகேட்டிலிருந்து கொழும்பு நீதிமன்றுக்கு அனுப்பப்பட்ட பி2899 என்னும் வழக்கு மீளவும் யாழ்ப்பாணம் நீதிமன்றிற்கு பாரப்படுத்த நடவடிக்கை .

இத்தகைய சூழலில், சர்வதேச விசாரணை ஒன்று முன்னெடுக்கப்படும் பட்சத்தில் கடந்த 1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் செம்மணி தொடக்கம் துண்டி இராணுவ முகாம் வரை இராணுவத்தால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட சகல படுகொலைகள், பல சேனா தலைமையகம் முதல் இராணுவத்தால் சித்திரவதை கூடங்கள் நடத்தப்பட்ட விதம் பற்றிய விபரங்கள், மணியம் தோட்டம் பகுதியில் உள்ள புதைகுழி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் சாட்சியமாக்கத் தயாராக இருப்பதாக அண்மையில் இராணுவ லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா, அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் உள்ளிட்ட தரப்பினரும் இத்தகைய வதை முகாம்கள் தொடர்பில் அறிந்திருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அக்காலப்பகுதியில் இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களாக 7ஆவது படைத் தலைமையகத்தின் புலனாய்வு அதிகாரிகளான கப்டன் லலித் ஹேவகே, கேப்டன் பெரேரா, லெப்டினன்ட் துடுகல, லெப்டினன்ட் உதயகுமார ஆகியோருடன் பொலிஸ் பரிசோதகர்களான அப்துல் ஹமீட் நஸார், சமரசிங்க ஆகியோரின் பெயர்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

எனவே, இந்த செம்மணி சிந்துபாத் மனிதப் புதைகுழிகள் விவகாரத்திற்குத் தலையீடுகளற்ற சுயாதீன சர்வதேச நீதி விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். அந்த சர்வதேச நீதி விசாரணைகளில் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவின் சாட்சியங்களும் பெறப்படவேண்டும்.

இவ்வாறு மேற்கொள்ளப்படுகின்ற சர்வதேச நீதி விசாரணைக்கு இந்த அரசானது தனது முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும். சர்வதேச நீதி விசாரணை மாத்திரமே பாதிக்கப்பட்ட எமது தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுத் தரும் ஒரே மார்க்கமாக அமையும். மேலும், கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்திற்கும் சர்வதேச நீதி விசாரணை என்றார்.



# புகார்களை ஏற்றல் ஆரம்பம்

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க 2025 ஜூன் 30ஆம் திகதி சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்தின்படி, 2025 ஜூலை 01ஆம் திகதி எடுக்கப்பட்ட இலக்கம் 25/1145/801/018 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், விமான நிலையங்கள் மற்றும் விமானச் சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம் மற்றும் ஸ்ரீலங்கன் விமான சேவை ஆகியவற்றில் கடந்த காலங்களில் நடந்த ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகள் குறித்து விசாரிக்க ஜனாதிபதி விசேட விசாரணைக் குழு நிறுவப்பட்டது,

அதன்படி, விமான நிலையங்கள் மற்றும் விமானச் சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம் மற்றும் ஸ்ரீலங்கன் விமான சேவை ஆகியவற்றின் ஊழியர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட தரப்பினரிடமிருந்து முறைப்பாடுகள், கருத்துகள் மற்றும் ஆலோசனைகளைப் பெற குழு எதிர்பார்க்கின்றது.

இது தொடர்பில் ஆர்வமுள்ள தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் 2025 செப்டெம்பர் 05ஆம் திகதிக்கு முன்னர் psicairport@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி (Email) அல்லது 070-330 7700 என்ற Whatsapp எண்ணுக்கு தமது கோரிக்கைகளை அனுப்பி, திகதி மற்றும் நேரத்தை முன்பதிவு செய்யுமாறு ஜனாதிபதி விசேட விசாரணைக் குழு கேட்டுக்கொள்கிறது.

# “நாணயத்தாள்களை...

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (21) விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில்,

எமது பொருளாதார மீட்சிக்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள நிலையில் எதிர்க்கட்சியினர் எதிர்மறையான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். 2025ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இலக்கிடப்பட்ட வருமானம் அடையப்பட்டுள்ளது. வரி வலையமைப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய சுங்கத்திணைக்களம் முதன்முறையாக அதிகளவில் வரி வருமானத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. இந்த ஆண்டு 2,150 பில்லியன் ரூபாய் வருமானம் எதிர்பார்க்கப்பட்ட நிலையில் சுங்கத்திணைக்களம் 1,316 பில்லியன் ரூபாய் இலாபமடைந்துள்ளது.

நிதி பாய்ச்சல் தொடர்பில் போதிய தெளிவில்லாமல் அரசாங்கம் நாணயம் அச்சிட்டுள்ளதாக எதிர்க்கட்சியினர் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். 2024ஆம் ஆண்டு அரசாங்கத்தைப் பொறுப்பேற்கும்போது, நிலைப்படுத்தப்பட்ட வெளிநாட்டுக் கையிருப்பை விடவும் விட தற்போது வெளிநாட்டுக் கையிருப்பு உயர்வடைந்துள்ளது.

நாணய புழக்கம் மற்றும் நிதி ஸ்திரப்படுத்தலை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு இலங்கை மத்திய வங்கிக்கு உண்டு. அரசாங்கம் 1.7 ரில்லியன் ரூபாய் வரையில் நாணயம் அச்சிடப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டு போலியானது. நாணயம் அச்சிட்டு வரவு-செலவுத் திட்டத்தின் பற்றாக்குறையை முகாமைத்துவம் செய்யப்போவதில்லை. நாணயம் அச்சிட்டுள்ளதாகப் போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. அவ்வாறு நாணயம் அச்சிட்டிருந்தால் பணவீக்கம் சடுதியாக உயர்வடைந்திருக்கும் என்றார்.

# “OT அதிகரிக்கப்படாது: விரல் ரேகை கட்டாயம்”

எஸ்.உதுமாலெப்பை எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில்,

மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தின் ஊழியர்கள் நியாயமற்ற கோரிக்கைகளை முன்வைத்து பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். இந்த விடயம் தொடர்பில் எதிர்க்கட்சியின் தலைவர் உட்பட எதிர்க்கட்சியினர் பேசுவார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால், எவரும் இவ்விடயம் குறித்து வாய் திறக்கவில்லை. ஐக்கிய தபால் சேவை சங்கத்தினர் தான் இந்த பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் முன்னிலையில் உள்ளார்கள்.

தபால் சேவையை வினைத்திறனாக்குவதற்கு உரிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. 1,000 நியமனங்களுக்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. அதேபோல் 1,000 நியமனங்களுக்கு விண்ணப்பம் கோரவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வாகனம் கொள்வனவுக்கு 250 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோல், தபால் நிலையங்களைப் புனரமைக்க 600 மில்லியன் ரூபாய் திறைசேரியால் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பின்னணியில் தான் ஒரு தரப்பினர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் சுதந்திர தொழிற்சங்கம், ஐக்கிய தபால் தொழிற்சங்கம், ஐக்கிய தபால் சங்கம் ஆகிய தொழிற்சங்கங்கள் அரசியல் நோக்கங்களை முன்னிலைப்படுத்தி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன. அரச நிர்வாகக் கட்டமைப்பில் அங்கீகரிக்கப்பட்ட மேலதிக நேர கொடுப்பனவு கோரியும், கைரேகை ஸ்கேனர் (பிங்கர் பிரிண்ட் ) இயந்திரத்தைப் பொருத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே போராடுகின்றனர்.



தபால் சேவையில் 2ஆம் தர சேவையாளர்களின் ஒரு மணித்தியாலத்துக்கு உரிய168 ரூபாய் மேலதிக நேர கொடுப்பனவு 234 ரூபாவாகவும், 2ஆம் தர உயர் சேவையாளர்களின் ஒரு மணித்தியாலத்துக்கு உரிய 254 ரூபாய் மேலதிக நேர கொடுப்பனவு 370 ரூபாவாகவும், 1ஆம் தர சேவையாளர்களின் ஒரு மணித்தியாலத்துக்கு உரிய 222 ரூபாய் மேலதிக நேர கொடுப்பனவு 324 ரூபாவாகவும், 1ஆம் தர உயர் சேவையாளர்களின் ஒரு மணித்தியாலத்துக்கு உரிய 303 ரூபாய் மேலதிக கொடுப்பனவு 439 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகரிப்புக்கு போதாது என்றும் எதிர்ப்பு தெரிவித்துப் போராடுகின்றனர்.

# அரசாங்கம் அஞ்சுவது ஏன்?

விசாரணைகளைத் தாமதப்படுத்த நடவடிக்கை எடுத்தார் என குற்றச்சாட்டு தெரிவிக்கப்படும் ஒருவர், நாட்டின் பிரதி பாதுகாப்பு அமைச்சுப் பதவி வகிப்பது தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (21) அன்று இடம்பெற்ற உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளை, நிதிச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதி மற்றும் நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில்,

ஜனாதிபதி உள்ளிட்ட அமைச்சர். பிரதி அமைச்சர், இராஜாங்க அமைச்சர்கள் பாராளுமன்றத்துக்கு பொறுப்புக்கூற வேண்டும் என்ற அடிப்படை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்த பொறுப்புக்களைப் பரிசீலிக்கும் ஒருமுறைதான் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவருவதாகும். இதற்கு முன்னர் இந்த பாராளுமன்றத்தில் அரசாங்கத்துக்கு எதிராகவும், பிரதமருக்கு எதிராகவும் சபாநாயகருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லா பிரேரணைகள் கொண்டுவர ப்பட்டிருக்கின்றன. அதேபோன்று 1981இல் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அமிர்தலிங்கத்துக்கு எதிராகவும் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்பட்டிருந்தது. அவர் பாராளுமன்றத்தில் ஒரு பதவியை வகித்தவர்.

அந்தவகையில், பிரதி அமைச்சரும் இராஜாங்க அமைச்சரும் இந்த பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லா பிரேரணையின் கீழ் கேள்விக்குட்படுத்தப்பட வேண்டும். எதிர்க்கட்சியினால் முறையாக நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், பிரதி அமைச்சர் ஒருவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்று கொண்டுவர முடியாது, நிலையியற் கட்டளைகளில் அவ்வாறு எதுவும் இல்லை என்று ஊடகங்கள் மூலம் பாரிய பிரசாரம் இடம்பெற்று வருகிறது. ஆனால் நிலையிற் கட்டளையில் அமைச்சருக்கு எதிரான, அரசாங்கத்துக்கு எதிரான, பிரதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை அல்லது குற்றப்பிரேரணை தொடர்பில் எங்கும் தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை.

அப்படியிருக்கையில், பிரதி அமைச்சருக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நம்பிக்கையில்லா பிரேரணை, விவாதிக்கப்படாமலே சபாநாயகரால் நிராகரிக்கப்படும் என நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து தெரிவிக்கப்பட்டதாக சிங்கள ஊடகம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சபாநாயகர் இந்த விடயத்தைத் தெரிவித்திருப்பார் என நாங்கள் நம்பவில்லை. அப்படியில்லாவிட்டால், அரசாங்கத்தில் யாராவது தெரிவித்திருக்க வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவரை நீதி கிடைக்காத நிலையில், இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பான சாட்சிகளை மறைத்தார் என்றும் விசாரணைகளைத் தாமதப்படுத்த நடவடிக்கை எடுத்துவந்தார் என குற்றச்சாட்டு தெரிவிக்கப்படும் ஒருவர், நாட்டின் பிரதி பாதுகாப்பு அமைச்சுப்பதவி வகிப்பது தொடர்பில் கேள்வி எழுப்ப, பாராளுமன்றத்துக்கு நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றைக் கொண்டுவரும்போது, அந்த நம்பிக்கையில்லா பிரேரணையை விவாதிக்காமல் நிராகரிப்பதற்கான தேவை இந்த அரசாங்கத்துக்கு இருக்கிறது.

அதனால் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை விவாதிக்காமல் ஏதாவது காரணம் ஒன்றைத் தெரிவித்து நிராகரிப்பதாக இருந்தால், அது பாராளுமன்ற ஜனநாயகம் தொடர்பான அறிவீனமாகும். அதேபோன்று, பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களுக்குப் பாராளுமன்றத்துக்கு இருக்கும் பொறுப்புக்கூறலை நிராகரிப்பதாகும். அதனால் நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றைக் கொண்டுவரும் உரிமையை நிராகரிக்காமல், அதன் உள்ளடக்கம் தொடர்பில் எங்களுக்கு விவாதிக்க முடியும் என்றார்.

# தென்னகோனுக்கு விளக்கமறியல்

அனைத்து காவல்துறை சாட்சிகளையும் ஒரு வாரத்திற்குள் விசாரிக்க வேண்டும் என்றும், அடுத்த விசாரணைத் திகதியில் சாட்சியங்களின் சுருக்கத்தை சமர்ப்பிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

# டயானாவுக்கு பிடிவிறாந்து

குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டத்தை மீறி விசா இல்லாமல் நாட்டில் தங்கியதாக டயானா கமகே மீது சிஐடி தாக்கல் செய்த ஏழு வழக்குகளின் சாட்சிய விசாரணை வியாழக்கிழமை (21) அன்று நடைபெறவிருந்தது, மேலும் வழக்கு அழைக்கப்பட்டபோது பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாததால் இந்த பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டது.குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம், மேல் நீதிமன்ற வழக்கு கோப்புகளின் பாதுகாவலர் மற்றும் வழக்கின் முதல் சாட்சியான வாதி ஆகியோரின் பிரதிநிதிகள் நீதிமன்றத்தில் ஆஜரானர்.

# ரணிலுக்கு அழைப்பாணை

ஆனால், தேசிய நிதியிலிருந்து நிதியளிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

10 பேர் கொண்ட குழுவை உள்ளடக்கிய இந்தப் பயணத்திற்காக அரசாங்கத்திற்கு சுமார் ரூ.16.9 மில்லியன் செலவானதாக CID மதிப்பிடுகிறது.

விசாரணையின் ஒரு பகுதியாக, முன்னாள் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் முன்னாள் தனியார் செயலாளர் சாண்ட்ரா பெரேரா ஆகியோரிடம் புலனாய்வாளர்கள் ஏற்கெனவே விசாரணை நடத்தியுள்ளனர்.

விக்ரமசிங்க ஜனாதிபதியாக இருந்தபோது, பொது நிதியைத் தவறாகப் பயன்படுத்தியதற்கான சாத்தியக்கூறுகள் குறித்த விரிவான விசாரணையின் சமீபத்திய முன்னேற்றமாக இந்த அழைப்பாணை உள்ளது.

### எஸ்.ஐயின் சிம் கார்டை

# திருடி பணத்தை கறந்த எஸ்.ஐ கைது

சந்தேக நபரான பயிற்சி உப-பொலிஸ் பரிசோதகருக்கு ஜூலை 31 முதல் அவ்வப்போது பணம் கிடைத்து வந்திருப்பது தெரியவந்துள்ளது.

அதன்படி, விசாரணைகள் நடத்தப்பட்ட பின்னர் சந்தேக நபரான உப-பொலிஸ் பரிசோதகர் கைது செய்யப்பட்டுள்ளார்.

# “காற்றாலைத் திட்டம் தேவையில்லை”

தம்பபவனி’ காற்றாலைத் திட்டமே போதும், இனி மன்னார் தீவிற்கு காற்றாலைத் திட்டம் தேவையில்லை என தமிழரசுக்கட்சியின் வன்னி மாவட்ட எம்.பி. துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை(21) அன்று இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்,

சிறிய அளவிலான நிலப்பரப்பினைக் கொண்ட மன்னார்த் தீவில் மீண்டும் காற்றாலைத் திட்டங்களை ஏற்படுத்தினால் அங்கு மக்கள் வாழமுடியாத நிலை ஏற்படுமென்பது அங்குள்ள மக்களின் அபிப்பிராயம். எனவே, மன்னார் தீவு மக்களின் அபிப்பிராயங்களைக் கருத்திலெடுத்துச் செயற்பட வேண்டும். மன்னார்த் தீவின் தெற்குக்கரையில் 30 நவீன விசையாழிகளை உள்ளடக்க ஏற்கெனவே உருவாக்கப்பட்டுள்ள ‘தம்பபவனி’ எனும் காற்றாலைத் திட்டமே போதும் இனி மன்னார்த் தீவினுள் காற்றாலைத் திட்டம் தேவையில்லை

மன்னார் மக்கள் இன்றோடு (நேற்று) தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மன்னார்த் தீவில் காற்றாலை மின் உற்பத்திக் கோபுரங்களை அமைக்கக் கூடாதென வலியுறுத்தியே அவர்களால் இவ்வாறு தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்தவிடயம் தொடர்பாக இம்மாதம் 13ஆம் திகதி ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தோம். அதற்கமைய இந்தக் காற்றாலைத் திட்டத்தை ஒருமாத காலத்திற்கு இடைநிறுத்தி வைப்பதெனவும், இத்திட்டம் தொடர்பில் உரிய தரப்பினர் மக்களிடம் அபிப்பிராயங்களைப் பெறவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஏற்கெனவே மன்னார்த் தீவின் தெற்கு கரையில் கடந்த 2020ஆம் ஆண்டு ‘தம்பபவனி’ எனும் பெயரில் 30 நவீன விசையாழிகளை உள்ளடக்கி இலங்கையின் முதலாவது பெரிய அளவிலான காற்றாலை மின்சக்திப்பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இதனைவிட மன்னார் தீவிற்குவெளியேயும் வங்காலை மற்றும் நறுவிலிக்குளம் ஆகிய பகுதிகளிலும் 6 காற்றாலை மின்உற்பத்திக்கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில், நாட்டின் பொருளாதாரத்திற்கும், நாட்டின் மின்சாரத் தேவைக்குமாக ஏற்கெனவே



தம்மால் பாரிய பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளதென்பதே மன்னார்த் தீவு மக்களின் அபிப்பிராயம். அத்தோடு, சிறிய அளவிலான நிலப்பரப்பைக் கொண்ட மன்னார்த் தீவில் மீண்டும் காற்றாலை மின் உற்பத்தி கோபுரங்களை நிறுவினால் மக்கள் மன்னார்த் தீவில் வாழமுடியாத துர்ப்பாக்கியநிலை ஏற்படுமென்பதும் அம்மக்களின் அபிப்பிராயமாகவுள்ளது.

எனவே, இந்தவிடயத்தில் மன்னார் தீவு மக்களின் இந்த அபிப்பிராயங்களைக் கருத்திலெடுத்து நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்துகின்றேன் என்றார்.

# ஒரே இடத்தில் 4 விபத்து

■ சுஜிதா

தலவாக்கலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹட்டன் - நுவரெலியா A7 பிரதான வீதியில் வியாழக்கிழமை (21) அன்று காலை 4 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளது.

ஹட்டன் பகுதியில் இருந்து தலவாக்கலை நோக்கி பயணித்த 4 மோட்டார் சைக்கிள்களே இவ்வாறு தலவாக்கலை தேயிலை தொழிற்சாலைக்கு அருகாமையில் அமைந்திருக்கும் மோட்டார் வாகன பழுது பார்க்கும் நிலையத்தின் முன்பாக விபத்துக்குள்ளானது.

குறித்த நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றிலிருந்து எண்ணெய் கசிந்து பிரதான வீதியில் சென்று கொண்டிருந்ததை தொடர்ந்து அவ் வீதி ஊடாக பயணித்த மோட்டார் சைக்கிள்கள் வீதியில் வழுக்கி விழுந்து விபத்துக்குள்ளானது.

விபத்தில் காயமடைந்த அனைவரும் உடனடியாக அருகில் உள்ள வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்டு சிகிச்சைகளின் பின்னர் வீடு திரும்பினர். இவ்விபத்து நிகழ்ந்து சில நிமிடங்களில் ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸார் வீதியூடான போக்குவரத்தை பாதுகாப்பாக முன்னெடுத்ததோடு சம்பவம் தொடர்பான விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

மோட்டார் வாகனம் பழுது பார்க்கும் நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் லொறி சாரதியின் அலட்சியப் போக்கினால் இந்த விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாக பலரும் தெரிவித்தனர்.

# புதையல் தோண்டிய நான்கு பேர் கைது

■ மொரொன்தொட ஆரச்சி

கேகாலை மாவட்டம், எட்டியந்தோட்டை, தொம்பேபொல பகுதியில் உள்ள கால்வாய் ஒன்றில் புதையல் தோண்டிய நால்வர் புதன்கிழமை (20) அன்று எட்டியந்தோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன் போது புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தும் உபகரணங்கள் மற்றும் ஒரு மோட்டார் சைக்கிள் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் மலல்பொல, பருஸ்ஸெல்ல, கிரிந்திவெல மற்றும் குருநாகல் பகுதிகளைச் சேர்ந்த 26, 27, 41 மற்றும் 25 வயதுடையவர்கள் என தெரியவந்துள்ளது.

அவர்களை ருவன்வெல்ல நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# சிவனொளிபாத மலையில் தீ பரவல்



■ காமினி பண்டார

பொகவந்தலாவை, லோயின்ஓன், சிவனொளிபாத மலை காட்டு பகுதியில் புதன்கிழமை (20) மாலை ஏற்பட்ட திடீர் தீ பரவலில் சுமார் மூன்றரை ஏக்கர் நிலம் எரிந்து நாசமாகியுள்ளதாக பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

லக்ஷபான இராணுவ முகாமைச் சேர்ந்த அதிகாரிகள், பொகவந்தலாவ பொலிஸார் மற்றும் மக்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளன.

அப்பகுதியில் நிலவும் வறண்ட வானிலை காரணமாக காட்டு விலங்குகளை வேட்டையாடும் நோக்கில் சில குழுக்கள் இவ்வாறான செயல்களில் ஈடுபடுவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

# ‘போர்ட் சிட்டி’யில் தண்ணீர் விற்றவருக்கு ரூ.500,000 அபராதம்

போர்ட் சிட்டி கடற்கரை பகுதியில் உள்ள ஒரு கடை உரிமையாளருக்கு ரூ.500,000 அபராதத்தை கொழும்பு மேலதிக நீதவான் பவித்ரா சஞ்சீவனி பத்திரண புதன்கிழமை (20) அன்று விதித்தார். ரூ.70க்கு விற்கப்படவிருந்த 500 மில்லி குடிநீர் போத்தலை ரூ.200க்கு விற்பனை செய்தபோது, சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

2003ஆம் ஆண்டு 09ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவுகள் 20(5) மற்றும் 68 மற்றும் 2021ஆம் ஆண்டு 20ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் பிரிவு 60(44) ஆகியவற்றின் கீழ் சந்தேக நபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

அதிக விலைக்கு தண்ணீர் போத்தல்கள் விற்பனை செய்வதைத் தடுக்கும் வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்ட போதிலும், அதிக விலைக்கு தண்ணீர் போத்தல்கள் விற்கப்படுவதாக தகவல் கிடைத்துள்ளதால், அத்தகைய இடங்களை சோதனை செய்ய உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.



# சீனாவின் 80ஆவது ஆண்டு நிறைவு

ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கு எதிரான சீன மக்கள் உதவி போரின் வெற்றியின் 80ஆவது ஆண்டு நிறைவையும் உலக பாசிச எதிர்ப்பு போரை நினைவு கூரும் வகையில் சீனா தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வு, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், புதன்கிழமை (20) அன்று இடம்பெற்றது.






















# யாழ். மாணவர்கள் ஜனாதிபதி செயலகத்திற்கு விஜயம்

யாழ்ப்பாண கல்வி வலயத்தின் மாணவர் பாராளுமன்ற பிரதிநிதிகள் குழு உட்பட யாழ்ப்பாணத்தின் 14 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு, அண்மையில் ஜனாதிபதி செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்படும் ‘Vision’ நிகழ்ச்சியில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்தது.

ஜனாதிபதி அலுவலகம், கல்வி அமைச்சு மற்றும் பாராளுமன்ற தொடர்பாடல் பிரிவு ஆகியவை இணைந்து பாடசாலை மாணவர்களுக்காக இந்த திட்டத்தை செயல்படுத்துகின்றன.



யாழ்ப்பாண வலய மாணவர் பாராளுமன்ற பிரதிநிதிகள் ஜனாதிபதி அலுவலகத்திற்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும். மாணவர் பாராளுமன்றம் என்ற எண்ணக்கரு, பாடசாலைகள் ஊடாக தேசிய நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வை உருவாக்குவதற்கும், அது குறித்த ஒரு கருத்தாடலைக் கட்டியெழுப்பவும் பங்களிக்கிறது.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு “ Clean Sri Lanka” வேலைத்திட்டம் மற்றும் அதன் கருத்தியல் பெறுமதி குறித்து தெளிவுபடுத்தப்பட்டது.


## டீசல் என்ட் மோட்டார் இன்ஜினியரிங் பிஎல்சி (PQ146) பங்குச் சான்றிதழ் இழப்பு

மேற்கண்ட நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவால், மறைந்த திரு. நிஹால் உபாலி அல்கம அவர்களின் பெயரில், 19,632 சாதாரண பங்குகளுக்கான நகல் பங்குச் சான்றிதழை வழங்குவதற்கான விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது, இதன் அசல் பங்கு தொலைந்துவிட்டதாகவோ அல்லது தவறிவிட்டதாகவோ தெரிவிக்கப்படுகிறது.

இதன் மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், 14 நாட்களுக்குள் நிறுவனத்தின் இயக்குநர்களிடம் எந்த உரிமைகோரல்களும் செய்யப்படாவிட்டால் அல்லது அவர்களிடம் எந்த ஆட்சேபனைகளும் பதிவு செய்யப்படாவிட்டால், நகல் பங்குச் சான்றிதழ் வழங்கப்படும், அதன் அசல் சான்றிதழ் ரத்து செய்யப்பட்டதாகக் கருதப்படும்.

**சபையின் ஆணைப்படி**
**ஜேசி மற்றும் நிறுவனம்**
**பதிவாளர்கள்**

2025 ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி

# நெருக்கடிகளை புரிந்துகொள்வது அவசியமாகும்

ஆளும் வர்க்கத்தால் தங்கள் தொழிற்சங்க உரிமைகள் முறையாக நிறைவேற்றப்படாவிட்டால், எந்தவொரு தொழிற்சங்கமும் ஊழியரும் வேலைநிறுத்தம் செய்ய உரிமை உண்டு. அந்த வேலைநிறுத்தத்திற்கு நியாயமான சமூக பின்னணி இருக்க வேண்டும்.

அஞ்சல் மற்றும் தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கம் மற்றும் கூட்டு அஞ்சல் தொழிற்சங்க முன்னணி ஆகியவை 19 கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு வேலைநிறுத்தத்தைத் தொடங்கியுள்ளன. வேலைநிறுத்தம் வெற்றியடைந்துள்ளதாகத் தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன. வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது நியாயமற்றது என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

சம்பளம் மற்றும் பதவி உயர்வுகளை அதிகரிப்பது என்பது தொழிற்சங்கங்களின் பிரபலமான முழக்கம். ஊழியர்களின் உற்பத்தித்திறன் அல்லது தொழிலாளர் உற்பத்தித்திறனை அதிகரிக்காமல் ஒரு நிறுவனம் வாங்க முடியாத அளவுக்கு சம்பளத்தை அதிகரிப்பது அமைப்பின் சரிவு மற்றும் பணவீக்கத்திற்கு வழிவகுக்கும் என்பது மிகவும் எளிமையான பொருளாதாரக் கோட்பாடாகும்.

இலங்கையில் தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தங்களைக் கடைசி முயற்சியாகக் கருதுகின்றன. பல்வேறு துறைகளில் தொழிற்சங்கங்கள் அவ்வப்போது நடத்தும் வேலைநிறுத்தங்களால் பாதிக்கப்படுபவர்கள் சாமானிய மக்களே. சுகாதாரத் துறையில் வேலைநிறுத்தங்கள் மற்றும் ரயில்வே ஊழியர்களின் வேலைநிறுத்தங்கள் அத்தகைய வேலைநிறுத்தங்களுக்கு சில எடுத்துக்காட்டுகள்.

இப்போதெல்லாம், அதிகாரப்பூர்வ கடிதப் போக்குவரத்து மற்றும் பொருட்களின் போக்குவரத்துக்கு அஞ்சல் ஒரு அத்தியாவசிய விஷயமாக மாறிவிட்டது. இன்று, தனிப்பட்ட கடிதப் போக்குவரத்துக்கு அஞ்சல் அரிதாகவே பயன்படுத்தப்படுகிறது. எனவே, அஞ்சல் காலத்திற்கு ஏற்ப நவீனமயமாக்கப்பட வேண்டும் என்பதை அஞ்சல் ஊழியர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அஞ்சல் தொழிற்சங்கங்கள் எதிர்க்கும் பிரச்சினைகளில் ஒன்று, வேலைக்கு வருகை மற்றும் புறப்பாட்டைக் குறிக்க கைவிரல் அடையாளத்தைக் கட்டாயமாக்கும் முடிவு. அந்த முடிவின் வெளிப்படுத்தப்பட்ட கருத்து என்னவென்றால், அவர்கள் தங்கள் கடமைகளைச் சரியாகச் செய்யவில்லை. குறிப்பிட்ட நேரத்தில் வருகை மற்றும் புறப்பாட்டைக் குறிக்கக்கூடிய எவரும் இந்த முடிவுக்கு உடன்படலாம். தற்போது, அஞ்சல் அலுவலகத்தின் மொத்த வருமானம் 14 பில்லியன் ரூபாய் மற்றும் மொத்த செலவு 18 பில்லியன் ரூபாய்.

இத்தகைய சூழ்நிலையில், சம்பள உயர்வு கோரி முழு நிறுவன அமைப்பையும் வீழ்த்தும் நோக்கில் செயல்படும் தொழிற்சங்கங்கள், நல்ல மனசாட்சியுடன் செயல்படுகின்றனவா என்பது ஒரு கேள்வி.

முழு நிறுவனத்தையும் அழிப்பதன் மூலம் தங்கள் சொந்த இலக்குகளை அடையத் தொழிற்சங்கங்கள் என்ன நியாயமான கொள்கையைக் கொண்டுள்ளன என்பது தெளிவாகத் தெரியவில்லை. கூடுதலாக, சம்பளம் வழங்குவதற்காக கூடுதலாக நானூறு மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

துணிச்சலான அறிக்கைகளை வெளியிடும் பல தொழிற்சங்க பிரதிநிதிகள் நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் நிதி நிர்வாகம் மற்றும் அந்தந்த நிறுவனங்கள் நீண்ட காலமாக எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள் மற்றும் பிரச்சினைகள் குறித்து முறையான புரிதலைக் கொண்டிருக்க வேண்டும். இல்லையெனில், குறுகிய கால காரணங்களுக்காக வேலைநிறுத்தங்களைச் செயல்படுத்துவதன் மூலம் முழு அமைப்பும் நெருக்கடிக்குள் செல்வதைத் தடுக்க முடியாது.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்


அச்சம், பயம் சஞ்சலம் இவையெல்லாம் ஒரே கருத்தாகத் தோன்றலாம். ஆனால், சதா மனம் குழம்பியபடியே இருப்பது சஞ்சலம். பயம், சில சந்தர்ப்பங்களில் எவருக்கும் நேரலாம். ஆனால், எல்லா விடயங்களாக்கும் தன்னை இழந்திருப்பது அச்சத்தின் வெளிப்பாடாகும்.

சில விஷயங்களில் நாம் சந்தர்ப்பங்களுக்கு ஏற்பட நடந்து கொள்ளவேண்டும். ஒருவன் குடிபோதையில் கத்தியுடன் தன்பாட்டிற்குச் செல்லும்போது, அவனை மறித்து உபதேசம் செய்யலாகாது. இது அச்சமற்ற செயல் அல்ல. வீரத்தை எல்லா நேரங்களிலும் காட்டலாகாது.

சும்மா போனவனைச் சண்டைக்கு இழுக்கலாகாது. அதன் விபரீதம் பெரிதாகலாம். அது கோஷ்டிச் சண்டையாகவும் மாறிவிடலாம். சில சந்தர்ப்பங்களில் கோழையும் வீரனாகின்றான். ஒருவரை வலிந்து தொடர்ந்து இம்சித்தால், அவன் சிங்கம் போல எழுந்து தாக்கி வீழ்த்திவிடுவான்.

துன்பமான விடயங்களை எதிர்கொண்டவர்கள் அச்சத்தைத் துச்சமாக்கிவிடுகின்றார்கள். வாழ்க்கையில் துணிவு பிரதானமானது. முன்னேற்றத்தை இது உருவாக்கும்.

– பருத்தியூர் பால.வயிரவநாதன்



## கடிதங்கள்

### காட்டு யானைகளால் பெருந்தொல்லை

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை மற்றும் அதனை அண்டிய பகுதியில் ஞாயிற்றுக்கிழமை(17) அதிகாலை காட்டு யானைகள் சில உட்புகுந்து பல்வேறு சேதங்களை ஏற்படுத்தியுள்ளன.

அதிகாலை 4 மணியளவில் பாடசாலையினுள் உட்புகுந்த இக்காட்டு யானைகள் பாடசாலையின் சுற்று மதிலின் சில பகுதிகளையும், பயன்தரும் மரங்களையும் உடைத்து சேதமாக்கியுள்ளதுடன், பாடசாலையினை அண்டிய பகுதிகளில் இருந்த சில மக்கள் குடியிருப்பு உடைமைகளுக்கும் சேதத்தினை ஏற்படுத்தியுள்ளன.

இதேவேளை, பாடசாலையினை அண்டிய மக்கள் குடியிருப்புக்களுக்குள் புகுந்த இக்காட்டு யானைகள் வீடுகள், சுற்றுமதில்கள், கால்நடை பராமரிப்புக் கொட்டில்கள், கால்நடை உணவுப் பொருட்கள், பயன்தரும் மரங்கள் மற்றும் மேட்டு நிலப் பயிர்ச் செய்கைகள் போன்றவற்றுக்கும் பலத்த சேதத்தினை ஏற்படுத்தியுள்ளதாகப் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

– எம்.ஏ.றமீஸ்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

பொருளாதார நெருக்கடியின் பின்னரான இலங்கை 34

# குடியேற்றத் திட்டங்களின் பலாபலன்கள்

1966ஆம் ஆண்டு நீர்ப்பாசனத் திட்டத்தை மறு ஆய்வு செய்ய நாட்டிற்கு வருகை தந்த உலக வங்கி மற்றும் உலக உணவு நிறுவகம் ஆகியன இணைந்த ஆய்வுக் குழுவானது, "புதிய பெரிய மூலதன மேம்பாட்டுப் பணிகளை நிர்மாணித்தல் மற்றும் புதிய நிலங்களைப் பயன்பாட்டுக்குத் தயார்ப்படுத்துவதற்குப் பதிலாக தற்போதுள்ள நீர்ப்பாசனத் திட்டங்களை மறுசீரமைக்க வடிவமைக்கப்பட்ட நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்" என்று பரிந்துரைத்தது. அதன்படி, நீர்ப்பாசன "மறுசீரமைப்புத் திட்டம்" மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அக்குழு முன்மொழிந்தது. சிறிய துணை நதிகளுடன் கூடிய பிரதான கால்வாய்களின் குறுக்கு வெட்டுகளில் கசிவுப் பாதைகள் மற்றும் கரையோர வாய்க்கால்களை அமைப்பதன் மூலம் பாசன நீரைக் கட்டுப்படுத்துவதற்கான பயனுள்ள முறைகளை இது வலியுறுத்தியது. நீர் விநியோகத்தை மேம்படுத்துவதற்காக நிரம்பி வழியும் வடிகால்கள் கட்டுதல் மற்றும் விநியோக கால்வாயிலிருந்து சிறிது தொலைவில் உள்ள பகுதிகளை அடைய, பண்ணைகளின் தொகுதிகளுக்கு விவசாய நீர் திருப்புமுனைகளை உருவாக்குதல் மற்றும் ஏற்கனவே உள்ள வயல்களில் கால்வாய்களைத் தோண்டுதல் அல்லது சுத்தம் செய்தல் ஆகிய இந்தப் பரிந்துரைகளின் பகுதியாக இருந்தன. நிலத்தின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக, 1966-70ஆம் ஆண்டு விவசாய அபிவிருத்தித் திட்டங்களில் பரிந்துரைக்கப்பட்ட உள்ளீடுகளின் தொகுப்பை இந்த முன்மொழிவுத் திட்டம் நம்பியிருந்தது.

நீர்ப்பாசன நீர் பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்கான இத்தகைய திட்டம் நீண்ட காலமாகவே தேவைப்பட்ட ஆனால், இல்லாத ஒன்றாக இருந்தது.

கொலனித்துவ (குடியேற்ற) திட்டங்களில் இதுவரை பயனுள்ள நீர் மேலாண்மை இல்லை. கொலனித்துவ விவசாயிகள் தேவையானதை விட எட்டு மடங்கு அதிக தண்ணீரைப் பயன்படுத்துவதற்குப் பெயர் பெற்றவர்களாவர். மேலும் விவசாயம் செய்யப்பட்ட வறண்ட மண்டலப் பகுதிகளில் சிறந்த நீர் மேலாண்மை மூலம் உற்பத்தியை இரட்டிப்பாக்க முடியும். 1963-64ஆம் ஆண்டு மகா காலப் பயிரச்செய்கையின் போது, பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் 75,000 ஏக்கர் அல்லது 20% நிலத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவில்லை. 1967-68 ஆம் ஆண்டு மகா காலப் பயிர்ச்செய்கையின் போது, 68,000 ஏக்கர் அல்லது அத்தகைய நிலத்தில் 16.5% பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவில்லை. 1968ஆம் ஆண்டு யால காலப் பயிர்ச்செய்கையின் போது, இந்த பரப்பளவு 176,000 ஏக்கர் அல்லது பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் மொத்த பரப்பளவில் 42% ஆகும். (உண்மையில் பெரிய, சிறு மற்றும் மானாவாரிப் பகுதிகளுக்கான பயிர்ச்செய்கை செய்யப்படாத மொத்தப் பரப்பளவு 1967-68ஆம் ஆண்டில் 202,000 ஏக்கர் ஆகும்). இவ்வளவு பெரிய அளவிலான நிலங்கள் பயிரிடப்படாததற்கு மிகவும் பொதுவான காரணம் தண்ணீர் பற்றாக்குறைதான்.

உண்மையில், வருடத்தின் அந்த பகுதியில் தண்ணீர் கிடைக்கும் போது அதை நிர்வகிக்காததே தண்ணீர் பற்றாக்குறைக்கு உண்மையான காரணம்.

இலங்கையின் உற்பத்தித்திறனைப் பொறுத்தவரை, கொலனித்துவ திட்டங்களிலிருந்து கிடைக்கும் வருமானம், அதிக மூலதன முதலீடுகள் செய்யப்பட்டதற்கு ஏற்ப ஒருபோதும் இருந்ததில்லை. இருப்பினும், நீர்ப்பாசனத்தின் கீழ் உள்ள இந்த பகுதிகள் உற்பத்தித்திறனில் விரைவான மற்றும் நிலையான அதிகரிப்புக்கான ஆற்றலைக் கொண்டுள்ளன. விஜயம் மேற்கொண்ட ஆய்வுக்குழு, ஐந்து வருட காலப்பகுதியில் பல்வேறு கொலனித்துவ திட்டங்களில் மீள் திட்டமிடலைப் பரிந்துரைத்தது.

1967-68ஆம் ஆண்டு மகா பயிர்ச்செய்கை காலப்பகுதியில், அரசாங்கம் எலஹெரா காலனித்துவ திட்டத்தில் 5,000 ஏக்கர் பரப்பளவை ஒரு சிறப்புத் திட்டமாக ஒரு மாதிரி அடிப்படையில் எடுத்துக் கொண்டது. மீள்திட்டமிடல் திட்டத்தைச் செயல்படுத்திய பிறகு, ஒரு ஏக்கருக்கு சராசரி நெல் விளைச்சல் 86.37 புஷல்களாக இருந்தது, இது தேசிய சராசரியான 47.49 புஷல்களாகவும், எலஹெரா கொலனித்துவ திட்டம் அமைந்துள்ள பொலன்னறுவ மாவட்டத்திற்கு 68.27 புஷல்களாகவும் இருந்தது.

இந்த முன்னோடித் திட்டத்தில் ஒரு ஏக்கருக்கு அதிக மகசூல் பெறப்பட்டது. கொலனித்துவ திட்டப் பகுதிகள் உற்பத்தித்திறனில் விரைவான அதிகரிப்புக்கு சிறந்த ஆற்றலைக் கொண்டுள்ளன என்பதை இது காட்டுகிறது.

இந்த வெற்றியால் ஊக்கமடைந்த அரசாங்கம், சிறப்புத் திட்டங்களின் கீழ் உள்ள பரப்பளவை 1968-69 மகா காலப்பகுதியில் 46,000 ஏக்கராகவும், 1969-70 மகாசபையில் 68,500 ஏக்கராகவும் விரிவுபடுத்தியது. இறுதியில் இது 9 கொலனித்துவத் திட்டங்களை உள்ளடக்கியது. இந்த சிறப்புத் திட்டப் பகுதிகள் அனைத்தும் பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தால் ஆய்வு செய்யப்பட்டு, முன்னேற்றத்தை மதிப்பிடப்பட்டன. இந்த ஆய்வு அறிக்கைகளின் படி, சிறப்புத் திட்டங்களின் மைய நோக்கமான விவசாய நீரை திறம்பட நிர்வகிப்பதில் ஒட்டுமொத்த வெற்றி எட்டப்படவில்லை.. சிறுபோகப் பருவத்தில் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு சிறுபோகப் பருவத்தின் பாதிக்கும் குறைவாகவே உள்ளது என்றும், நீர் விநியோகப் பற்றாக்குறை இன்னும் பெரிய பிரச்சினைகளாக இருப்பதாகவும் ஆய்வுகள் கண்டறிந்தன.

சிறுபோகப் பருவத்தில் விநியோகிக்க அதிக நீர் கிடைக்க அனுமதிக்கும் வகையில், சிறுபோகப் பருவத்தில் நீர் பயன்பாட்டைச் சிக்கனப்படுத்த நடவடிக்கைகள் குறிப்பாகத் தேவைப்பட்டன.

நெல் விளைச்சலைப் பொறுத்தவரை, எலஹெரா பகுதியின் விளைச்சல் குறித்த மறு கணக்கெடுப்பு, அதிகரிப்புகள் குறிப்பிடத்தக்கவை அல்ல என்றும், பொலன்னறுவை மாவட்டத்தை விட அதிகமாக இல்லை என்றும் காட்டியது.

ஒட்டுமொத்த ஒன்பது காலனித்துவ திட்டங்களிலும், மகசூல் குறைவாக இருப்பது கண்டறியப்பட்டது, குறிப்பாக யாலாவில், முக்கியமாக போதுமான நீர் மற்றும் திறமையற்ற விநியோகம் காரணமாக. இதனால், முன்னோடித் திட்டத்தில் மறுவாழ்வுத் திட்டத்தின் மூலம் நிரூபிக்கப்பட்ட வெற்றி, திட்டம் நீட்டிக்கப்பட்டபோது சாத்தியமாகவில்லை.

உண்மையில், குறித்த திட்டத்தின் நீட்டிப்பு ஆய்வுக்குழு பரிந்துரைத்த கொலனித்துவ திட்டங்களுக்கு அல்ல, மாறாக சில புதிய திட்டங்களுக்கே என்பது பின்னர் தெரிய வந்தது.

1965 முதல் வேலையில்லாத படித்த இளைஞர்களை நிலத்தில் குடியமர்த்துவதற்கான கொள்கை பின்பற்றப்பட்டது. இளைஞர் குடியேற்றம் இரண்டு வடிவங்களை எடுத்தது.

முதலாவதாக, பெரிய குடியேற்றத் திட்டங்களில், 10மூ ஒதுக்கீடுகள் எஸ்.எஸ்.சி. நிலையை எட்டிய பண்ணைப் பள்ளிகளின் மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டன.

இரண்டாவதாக, இதேபோல் படித்த இளைஞர்களுக்கு, தேயிலை, ரப்பர், தேங்காய் மற்றும் பிற பணப்பயிர்களை வளர்ப்பதற்காக சிறு நீர்ப்பாசனப் பணிகள் மீட்டெடுக்கப்பட்ட பகுதிகளில் சிறப்பு இளைஞர் திட்டங்கள் நிறுவப்பட்டன.

ஒதுக்கீடு திட்டம் வெற்றிகரமாக செயல்படவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்கள் நிலத்தில் வாழ்க்கை நடத்துவதில் ஆர்வம் காட்டத் தவறிவிட்டனர். மேலும், அவர்களில் பலர் பிற வேலைவாய்ப்பைப் பெறுவதில் தங்கள் ஒதுக்கீடுகளைக் கைவிட்டனர். சிறப்பு இளைஞர் குடியேற்றத் திட்டங்களைப் பொறுத்தவரை, இளைஞர்கள் மற்றும் விரிவாக்க அதிகாரிகளுக்குத் தேவையான விவசாயத் திறன்கள் இல்லாததால் ஒரு சில மட்டுமே வெற்றி பெற்றன. ஆனால் வெற்றிகரமாக நிரூபிக்கப்பட்ட ஒரு திட்டம் முத்தையன்கட்டுத் திட்டம், அங்கு யாழ்ப்பாண தீபகற்பத்தைச் சேர்ந்த விவசாய குடும்பங்களைச் சேர்ந்த படித்த இளைஞர்கள் சிவப்பு வெங்காயம், மிளகாய் மற்றும் பச்சைப் பயறு பயிரிடுவதன் மூலம் கணிசமான வருமானத்தை ஈட்டினர். மூன்று இளைஞர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட மூன்று ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து தலா ரூ.20,000க்கு மேல் சம்பாதித்தனர், மேலும் பதினெட்டு பேர் ரூ.15,000 முதல் ரூ.20,000 வரை சம்பாதித்தனர்.

பின்னர் இந்த இளைஞர்கள் எட்டு புதிய டிராக்டர்களை வாங்கினார்கள். இது, ஒற்றைப் பயிர் நெல் சாகுபடியுடன் ஒப்பிடும்போது, உள்@ர் சந்தைக்குப் பணப் பயிர்களைப் பயிரிடுவதில் அதிக ஆற்றல் இருப்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.


இந்தத் திட்டத்தில் (300 இளைஞர்களை உள்ளடக்கியது) ஒவ்வொரு இளைஞரும் பெற்ற சராசரி ஆண்டு வருமானம், அரச அலுவல வேலைவாய்ப்பிலிருந்து அவர்களில் எவரும் பெறக்கூடியதை விட கணிசமாளனவு அதிகமாகும்.

1965ஆம் ஆண்டில், துணை உணவுப் பொருட்களைப் பயிரிடுவதற்கும் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவதற்கும் உலர் மண்டலத்தில் 25 ஆண்டு குத்தகைக்கு நிறுவனங்களுக்கு நிலத்தை வழங்க அரசாங்கம் முடிவு செய்தது. விவசாயத்தில் ஈடுபட அவர்களைத் தூண்டுவதற்காக அவர்களுக்கு வரிச் சலுகைகள், வாகன அனுமதிகள் போன்றவை வழங்கப்பட்டன.

1966-70 விவசாய மேம்பாட்டுத் திட்டங்கள் இந்த அடிப்படையில் 30,000 ஏக்கர் வருடாந்திர குத்தகைக்கு வழங்கப்பட்டன. இந்தக் காலகட்டத்தில் அண்ணளவாக 60,000 ஏக்கர் உண்மையில் குத்தகைக்கு விடப்பட்டது. ஆனால், கால்நடை வளர்ப்பிற்காகக் குத்தகைக்கு விடப்பட்ட 16,000 ஏக்கர் நிலத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பதும், துணை உணவுப் பயிர்களைப் பயிரிடுவதற்காக ஒதுக்கப்பட்ட பகுதிகளில் மிகக் குறைவாகவே செய்யப்பட்டுள்ளதும் விரைவில் கண்டறியப்பட்டது. 1970இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது இந்த சிறப்பு குத்தகைகள் ரத்து செய்யப்பட்டன.

### விவசாயிகள் மற்றும் இளைஞர்களை

# வலுப்படுத்தும் கொமர்ஷல் வங்கி



இலங்கையில் விவசாயத்தை நவீனமயமாக்குவதற்கும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கு உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும், கிளிநொச்சியில் 100 விவசாயிகளுக்கு ஸ்மார்ட் விவசாய தொழில்நுட்பங்களில் நேரடிப் பயிற்சியை வழங்குவதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்துடன் கொமர்ஷல் வங்கியானது பங்காண்மையை ஏற்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

வங்கியின் 'விவசாய நவீனமயமாக்கல் கிராமம்' திட்டத்தின் கீழ் பல்கலைக்கழகத்தின் பசுமை இல்லத்தில் முழு நாள் பயிற்சிப்பட்டறையொன்று நடைபெற்றதுடன், வெளிகளப்பகுதிகளில் செயல்விளக்கங்களும் முன்னெடுகப்பட்டன. இந்நிகழ்வுகள் விவசாயிகள், இளைஞர்கள், விவசாய மாணவர்கள் மற்றும் பயிற்றுனர்களை ஒன்றிணைத்து, ஒழுங்கற்ற வானிலை முறைகள், பூச்சி தாக்குதல்கள் மற்றும் குறைந்த பயிர் விளைச்சல் ஆகியவற்றால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும் நடைமுறை, மற்றும் சுற்றுச்சூழல் ரீதியான நிலையான முறைகளை ஆராய்வதாக அமைந்திருந்தன.

இதில் கலந்து கொண்ட பங்கேற்பாளர்கள் உரம் வெட்டும் கருவிகள், வரட்சியைத் தாங்கும் பயிர் வகைகள், திறமையான நீர்ப்பாசன முறைமைகள் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் இயங்கும் கருவிகள் உள்ளிட்ட காலநிலை தொடர்பான நேர்த்தியான புத்தாக்கங்களில் நேரடியாக ஈடுபட்டனர். இந்த பயிற்சிப் பட்டறையானது விவசாயத்தை நவீன, தொழில்நுட்பம் சார்ந்த மற்றும் இலாபகரமான துறையாக மாற்றுவதற்கான மனநிலை மற்றும் வழிமுறைகள் இரண்டையும் கொண்ட புதிய தலைமுறை விவசாய தொழில் முயற்சியாளர்களை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு, இளைஞர்களை வலுப்படுத்துவதில் சிறப்பு கவனத்தை செலுத்தியது.

இந்தப் பயிற்சிப்பட்டறையானது பல்கலைக்கழகத்தின் குழுவால் ஒருங்கிணைக்கப்பட்டதுடன், இது கிளிநொச்சியில் உள்ள அதன் தானியங்கி பசுமை இல்லங்கள், விவசாய அலகுகள் மற்றும் விவசாயிகளால் பராமரிக்கப்படும் செயல் விளக்க வயல்களைப் பயன்படுத்தி அறிவு பரிமாற்றத்தை எளிதாக்கியது. கொமர்ஷல் வங்கியானது இந்த முயற்சிக்கு நிதி உதவி அளித்ததுடன், மற்றும் அதன் விவசாய கடன் வாடிக்கையாளர்கள் இதில் பங்குபற்றுவதற்கான வசதியை வழங்கியிருந்ததுடன், வங்கியிடமிருந்து வடிவமைக்கப்பட்ட நிதியியல் தீர்வுகளின் உதவியுடன் விவசாயிகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தொழில்நுட்பங்களை வெளிப்படுத்த முடியும் என்பதை உறுதி செய்தது.

இந்த சமீபத்திய முயற்சியானது விவசாய நவீனமயமாக்கலில் வங்கியின் வளர்ந்து வரும் தடத்தை அடிப்படையாகக் கொண்டதாக அமைந்திருந்ததுடன் மற்றும் நிலைபெறுதகு தன்மைக்கான வளர்ச்சி, கிராமப்புற பொருளாதார அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் விருத்திக்கான அதன் பரந்த அர்ப்பணிப்பை பிரதிபலித்தது. இத்தகைய முயற்சிகள் மூலம், வங்கி தனது விவசாய வாடிக்கையாளர்களின் உற்பத்தித்திறன் மற்றும் மீள்தன்மையை மேம்படுத்துவதுடன் மட்டுமல்லாமல், கடன் இடரைக் குறைத்து, இலங்கையின் விவசாய சமூகங்கள் முழுவதும் நீண்டகால பொருளாதார ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளதாக வங்கி தெரிவித்துள்ளது.

### தெற்காசியா பிராந்தியத்தில்

# Cambridge சுமார் 1,000 பாடசாலைகளை சென்றடைவு



சர்வதேச கல்விச் சேவைகளை வழங்கும் குழுமமான Cambridge University Press & Assessment (Cambridge), தெற்காசிய பிராந்தியத்தில் சுமார் 1,000 Cambridge சர்வதேச பாடசாலைகளை கடந்துள்ளதாக அறிவித்துள்ளது. அதனூடாக பிராந்தியத்தில் உலகத் தரம் வாய்ந்த கல்வியைப் பெற்றுக் கொடுப்பதற்கான அர்ப்பணிப்பில் முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல்லை எய்தியுள்ளது. தெற்காசியாவில் கல்விச் செயற்பாடுகளில் Cambridge இன் அதிகரித்துச் செல்லும் செல்வாக்குச் செலுத்தலை உறுதி செய்வதாக இந்த சாதனை அமைந்திருப்பதுடன், கல்லூரிகளின் பிரதான மையமாக இலங்கை வளர்ந்துள்ளது.

இலங்கையில் பெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் வளர்ந்து வரும் அபிலாஷைகளை ஆதரிக்க, Cambridge உள்ளூர் திறமைசாலிகளில் முதலீடு செய்து, அர்ப்பணிப்பான அணியை நிறுவியுள்ளது. இந்த குழுவினருக்கு, கல்லூரிகளுடன் நேரடியாக ஈடுபடவும், உள்ளூர் கல்வியாளர்களுக்கு உலகத்தரம் வாய்ந்த கற்பித்தல் மற்றும் கற்றல் அனுபவங்களை வழங்க அதிகாரம் அளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஆதரவை வழங்கவும் முடிந்துள்ளது.

தெற்காசியாவில் Cambridgeஇன் வளர்ச்சி, சர்வதேச கல்வியை நோக்கிய உலகளாவிய மாற்றத்தை பிரதிபலிக்கிறது. முந்தைய எந்த ஆண்டையும் விட 2024ஆம் ஆண்டில் Cambridge பரீட்சைகளுக்கு தோற்றியிருந்தவர்களின் எண்ணிக்கையில் சாதனை படைத்துள்ளது. பிராந்தியத்தில் உள்ள கல்லூரிகள் சமூகத்தின் கோரிக்கைகளுக்கு பதிலளிக்கும் விதமாக, Cambridge மார்ச் 2026 இல் மூன்றாவது Cambridge Checkpoint பரீட்சைத் தொடரை அறிமுகப்படுத்தும், இது கல்லூரிகளுக்கு, தமது கல்வி நாட்காட்டிகளுக்கு ஏற்ப மதிப்பீடுகளை திட்டமிட அதிக நெகிழ்வுத்தன்மையை வழங்கும்.

Cambridge இல், மாணவர்கள் AS & A நிலைக்கு 50க்கும் மேற்பட்ட வெவ்வேறு பாடங்களிலிருந்தும், Cambridge IGCSEக்கு 70க்கும் மேற்பட்ட பாடங்களிலிருந்தும் தெரிவுகளை மேற்கொள்ளலாம். இது இலங்கையின் கல்வி முறையின் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப, தங்களுக்கு மிகவும் பொருத்தமானதைத் தெரிவுசெய்ய மாணவர்களுக்கு மிகப்பெரிய நெகிழ்வுத்தன்மையை வழங்குகிறது.

3 வயது முதல் 19 வயது வரையான, Cambridge Pathway என்பது பகுப்பாய்வு சிந்தனை மற்றும் சுயாதீன ஆராய்ச்சி திறன்களை மேம்படுத்தவும், தகவல் தொடர்பு மற்றும் தலைமைத்துவ திறன்களை வளர்க்கவும் உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தெற்காசியாவின் சர்வதேச கல்விக்கான சிரேஷ்ட உப தலைவர் வினய் ஷர்மா கருத்துத் தெரிவிக்கையில், "தெற்காசியாவில் 1,000 பள்ளிகள் என்ற இலக்கைத் தாண்டியிருப்பது, கற்பவர்களுக்கும் கல்வியாளர்களுக்கும் அதிகாரம் அளிக்கும் உலகத்தரம் வாய்ந்த கல்வியை வழங்குவதற்கான எங்கள் அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும். இலங்கையில், உலகளாவிய பாடத்திட்டங்களுக்கான அதிகரித்து வரும் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும், எதிர்காலத்திற்குத் தயாராக இருக்கும் அடுத்த தலைமுறை கற்பவர்களை வடிவமைக்க உதவுவதற்கும் கல்லூரிகளுடன் கூட்டு சேர்வதில் நாங்கள் பெருமை கொள்கிறோம். எங்கள் திட்டங்கள் கல்வி சாதனைகளுக்கு அப்பாற்பட்டவை - அவை காலநிலை மாற்றம் முதல் AI இன் எழுச்சி வரை உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளும் திறன்கள், மனநிலை மற்றும் நம்பிக்கையுடன் கற்பவர்களை ஒன்றிணைப்பதாக அமைந்துள்ளன." என்றார்.

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான தலைமை அதிகாரி சஹாரா அன்சாரி கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கை விறுவிறுப்பான மற்றும் வேகமாக வளர்ந்து வரும் கல்வி சமூகத்தின் தாயகமாகும். மேலும் கற்பவர்களின் விருப்பங்களை ஆதரிக்க நாடு முழுவதும் உள்ள கல்லூரிகளுடன் நெருக்கமாக ஒத்துழைப்பதில் நாங்கள் பெருமை கொள்கிறோம். களத்தில் ஒரு அர்ப்பணிப்புள்ள குழுவுடன், இலங்கையில் உள்ள Cambridge கற்பவர்கள் உயர்தர, எதிர்காலத்திற்குத் தயாராக உள்ள கல்வியிலிருந்து பயனடைவதை உறுதிசெய்யும் தனிப்பயனாக்கப்பட்ட வழிகாட்டுதல் மற்றும் சேவைகளை எம்மால் வழங்க முடிகிறது. இது உள்ளூர் முன்னுரிமைகள் மற்றும் உலகளாவிய தரநிலைகளுடன் பொருந்தும் வகையில் அமைந்துள்ளது" என்றார்.



# தாயகமாம் என் லங்கா

சிற்றோர் தீவு தான் என் லங்கா
ஆயினும் ஆயிரத்திலும்
அது ஒன்றே
'பேர் அழகு' என்பேன்..!

நாற்புறமும் கடல் சூழ
நடுவே இவள் அவதாரம்
எத்தனை எத்தனை அழகு..!

காடு மலையென
இயற்கை பின்னிட
மனநிம்மதிக்கு
அது ஒன்று போதுமடா..!

நதிகள் சலசலக்க
தவழ்ந்தாடும் குளக்கரைகளிலுமாய்
நீர் மாதா இங்கு தான்
குடி கொண்டிருக்கிறாளோ
என வியக்கத் தோனும்..!

பாசத்திற்கு பஞ்சம் இல்லை என்பர்
பாசம் கற்றிட லங்கா வாரும் என்பேன்
பல்லின மாந்தர் கூட்டம்
ஒற்றுமையாய் இப்பூத்தரையில்..!

தமிழும் சிங்களமும்
தாய் மொழிகளாய்
மொழிகளின் சங்கமமாய்
'என் லங்கா பூமி' இங்கு,

ஆதியில் முதல் தலைநகரமாம்
அனுராதபுரம் வீற்றிட..!
இன்றும் வரலாறு பேசும்
அதன் பெருமை,

பின்னும் தலைநகராய்
ஜயவர்தனபுர மாறிட
அத்தனைக்கும் மையமாய்
கொழும்பும் எழுந்தது
சில நூற்றாண்டிலே,


நல்லூரான் குடி கொள்ள,
கலாச்சாரத்தின் உச்சமாய் யாழும்,
பண்பாட்டின் மைந்தர்களாய்
யாழ். மாந்தரும்
இன்றும் வீரம் பேசும்
கதைகள் ஆயிரம்..!
யாழ். மண் போதுமடா
ஈழத்தின் மகிமை உரைத்திட,

மத்தியில் தோன்றி,
மலைகள் சூழ் காத்து,
நதிகளின் ஊற்றாய்
பயிர்நிலம் கொண்டு
என் லங்காவின்
சீவியம் காக்கும்
மலைநாட்டின்
அதிசயம் யாது கூறேன்..!

கிழக்குக்கரை தனில் தோன்றி,
கோணேஸ்வரம் உயர்ந்து நிற்க,
சிவனின் மகிமை சர்வமும் சொல்ல
இஸ்லாமியரின் வரலாறும்
முதல் துவங்க
மீன்கள் இசைபாட
கிழக்கிழங்கையென நாமம் பெற,

தென்னிலத்திலே,
ஹிக்கடுவையாம்
கடற்பசுமை அலைமோத,
யாலவில் உயிரினங்கள் அழகு சேர்க்க,
காலிக்கோட்டையும் மேலெழ,
சுற்றுத்தளங்கள்
நாளும் சூழும் மக்கள் தான்
ஆயிரமாயிரமாம்,

இத்தனையும்
என் லங்கா மகிமை என்றேன்,
அவள் போலும்
அழகி இல்லை என்பேன்,
என்னவள் புகழ்
சொற்க்கோர்வைகளில் தான்
அடங்குமா என்ன..?



முஹம்மட் ரஃபீக்
ஸம்ஹறா,
யாழ். பல்கலைக்கழகம்

# வானம் மட்டுமா போதி மரம், மலைகளும் தான்

மலைகளைப் பேச விடுங்கள்..!
மலைகளே..!
எங்கள் தோழர்கள் மலைகள்
எங்கள் உறுதிகள்..!
அனுபவ வார்த்தைகளால்
புடம் போடப்பட்டோம் மலைகள்
நாளும் எங்களுக்கு
செய்தி சொல்லும் வானம் மட்டுமா..!
போதிமரம் மலைகளும் தான் நாம்
ஒவ்வொரு நாளும் ஏன்?
ஒவ்வொரு நொடிப்பொழுதும்
எம்முள் செதுக்கும் மலையே..!

உன் கம்பீரம் பல்லுயிரியம்
பறவைகளின் கூடாரம்
நதிகளின் சரசம் தென்றல்
சிலவேளை திமிர் கொண்ட
இரைச்சல் தாயாக
தரணியின் அத்தனை
உயிர்களுக்கும் நிமிர்ந்த
நல் இயற்கையே..!

உன்னோடு எமக்கிருக்கும்
ஊடாட்டம் அதிகமே..!
உன் தடம் எல்லாம் படரும்
என் நினைவுகள் நிகழ்கால சித்திரங்கள்..!

மலைகளின் இடையே
பயணிக்கும் போது
கற்பனைக்கு எட்டாத
கர்வத்தை தருவாய்
உன் ஒவ்வொரு பரிமாணத்தை
மன பரிமாணமாய் தருவாய்
நம்பிக்கை திமிர் உறுதி
ஆகர்ஷிப்பு அரவணைப்பு

மனவெளிக்குள் புத்தனின் தேடல்
பற்றற்ற வாழ்வின் உருப்பொருளே..!
இயற்கையின் அத்தாட்சியே..!
வாழ்வின் எல்லை வரை
செய்தி சொல்லுவாய்..!
புரிதலுக்கான பக்குவம் நமக்கு உண்டா?
சம்சார வாழ்வில்
சஞ்சாரம் செய்யும் மனமே..!
மீண்டும் மீண்டும்
இயற்கையின் விதியை
ஆழமாக உணர்த்துகிறாய்
எம்மை எல்லாம் புடம் போடுகிறாய்
கேடுகெட்ட மனம் பற்றிக் கொள்கிறது
பதறாமல் சிதறாமல்
ஒற்றை விதியை
ஓர்மையாக உணர்த்துகிறாய்..!

வானம் மட்டுமா
போதிமரம் மலைகளும் தான்..!



சோலை சுப்ரா

# நாம் எல்லாம் மலையாவோம்



மலைகளின் வாரிசுகளே..!
நாம் மலையாவோம்..!

மலைகளின்
வாரிசுகளே..! கேளீர்..!
மலைகளில் பேதம் இல்லை
ஆகையால் – நாம்
மலையாவோம்..!


மலைகளின்
வாரிசுகளே ! சிந்திப்பீர்..!
இயற்கையின் சாட்சியம்
பொய்க்காது ஆகையால் – நாம்
மலையாவோம்..!


மலைகளின்
தரிசிப்பில் மானுடம்
சுவாசிப்போம்!
பல்லுயிர் போற்றி..!
பாறையாய் உறுதி ..!
நதியாய் பரிணமித்து
பூமியின் இருப்பாய்
மேகமதை அனைத்து
நிலவுக்கு முற்றமாய்..
நீண்ட பயணத்தின் நிழலாய்..!

நாம் – எல்லாம்
மலையாவோம்..!

சோலை சுப்ரா







# கந்தனுக்கு அரோகரா

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் தேர்த்திருவிழா வியாழக்கிழமை (21) அன்று நடைபெற்றது.


நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழா கடந்த மாதம் 29ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நிலையில் வியாழக்கிழமை (21) அன்று தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்குக் காலசாந்தி பூஜையும் , 6.15 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும் நடைபெற்று 7 மணியளவில் உற்சவ மூர்த்திகள் தேரில் எழுந்தருளி உள்வீதி உலாவில் காட்சியளித்து அருள்பாலித்தார்.


















## அபிவிருத்தியின் மூன்று தூண்கள்

# கூலட் வலியுறுத்தும் வாழ்வாதாரம், மரியாதை, சுதந்திரம்



நிசான் குமார் கோபிநாத்,
முதலாம் வருடம்,
கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

அபிவிருத்தி என்பது ஒரு பல்பரிமான வளர்ச்சி செயன்முறையாகும். அது ஒவ்வொருவருடைய பார்வைக்கு ஏற்ப வேறுபடும். நாட்டுக்கு நாடு சமூகத்திற்கு சமூகம் மக்களுக்கு மக்கள் வேறுபடும் தன்மை உடையது. ஆனாலும், அபிவிருத்தி தேவை என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதொரு விடயமாகும். இன்றைய உலகில் எல்லாநாடுகளும் அபிவிருத்தியினை குறிக்கோளாகக் கொண்டே பயணிக்கின்றது. ஒரு சில நாடுகள் அதனை முறையான அணுகுமுறைகளின் ஊடாக வெற்றிகரமாக மேற்கொள்கின்றன.

உதாரணமாக, இவ்வுலகில் அபிவிருத்தி அடைந்த நாடுகளான ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளைச் சுட்டிக்காட்ட முடியும். இன்னும் சில நாடுகள் அபிவிருத்தி அடைந்து கொள்வதற்காகப் பல திட்டங்களுடன் அல்லது செயற்பாடுகளை உருவாக்கி அதன் மூலம் பயணிக்கின்றது. அதனையே நாம் நிலையான அபிவிருத்தியை நோக்கி நகருகின்ற நாடுகள் என சுட்டிக்காட்டுகின்றோம்.

ஒரு நாட்டில் அபிவிருத்தி என்பது உயர்வடைய வேண்டுமென்றால், அதற்கு அந்த நாட்டினுடைய மக்கள் மிக முக்கியமானவர்களாவரகள், ஆகவே, மக்கள் என்பவர்கள் வெறுமனே அபிவிருத்தியில் பயன்பெறுபவர்கள் மட்டுமல்ல, அபிவிருத்தியின் ஒரு பங்குதாரர்களாக அவர்களை உருவாக்க வேண்டியது அந்த நாட்டினுடைய அபிவிருத்தி திட்டத்தின் கடமையாகும். அப்பொழுதுதான் அங்கு அபிவிருத்தி என்பது ஒரு நிலைப்பாட்டினை அடையும். எல்லோரும் அதன் பயனாளர்களாகிவிட்டால் அங்கு அபிவிருத்தி என்பது முழுமை அடையாது. மாறாக, அபிவிருத்தியில் பங்குதாரர்களை உருவாக்கும் பொழுதே அபிவிருத்தி என்பது என்றும் கீழ் நிலைப்படாமல் ஒரே சமதளத்தில் திடமாக கட்டியெழுப்பப்படும்.

தனித்த பொருளாதார காரணிகளில் ஏற்பட்ட முன்னேற்றத்துடன் மாத்திரம் தங்கி விடக்கூடாது. அவ்வாறு தங்கிவிட்டால், அது அபிவிருத்தி அல்ல, மாறாக வருமான பகிர்வு. வறுமையை ஒழித்தல், அடிப்படைத் தேவைகளை விருத்தி செய்தல், வேலையின்மையை மேம்படுத்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளின் விரிவாக்கம்,போன்ற பலவேறு விடயங்களிலும் கவனம் செலுத்தப்படவேண்டிய ஒன்றாகும். ஒரு நாட்டினுடைய பொருளாதாரக் காரணிகள் மாத்திரம் அபிவிருத்திக்குப் பங்களிப்பு செய்வதில்லை. மாற்றிடாக, மக்களின் உள்ளார்ந்த ஆற்றல்களையும் திறன்களையும் மேம்பாடடைய செய்யும் வகையில் காணப்பட வேண்டும் என்பதே நிதர்சனமான உண்மை.

தேசிய பொருளாதாரத்தை மாத்திரம் அபிவிருத்தியாகக் கொண்டிருந்தால் இன்று அமெரிக்கா, சிங்கப்பூர் மற்றும் சுவீஸ் போன்ற நாடுகள் அபிவிருத்தியை அடைந்திருக்க முடியுமா? என்பது கேள்விக்குரியதாகும். 1950 தொடக்கம் 1960 வரையான காலப்பகுதியில் அபிவிருத்தி என்பது தேசிய பொருளாதாரத்துடனே கட்டமைக்கப்பட்டது. ஆனால், காலப்போக்கில் அந்த கட்டமைப்பில் தவறு இருப்பதாக உணரப்பட்டு 1970க்கு பின்னர் அபிவிருத்தி என்பது ஒரு நாட்டினுடைய தேசிய பொருளாதாரத்தில் மட்டும் தங்குவதில்லை சாதாரண மக்களின் வாழ்க்கைத் தரத்திலும் தங்கியுள்ளதாக நிரூபிக்கப்பட்டது.

சாதாரண மக்களும் அபிவிருத்தியில் உள்ளீர்க்கப்படும் பொழுதே அந்த சமூகத்தினுடைய வறுமை, வேலையின்மை மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகள் போன்றவை இல்லாதொழிக்கப்பட்டு அவர்களுடைய வழக்கைத் தரம் மேம்பாட்டையும் அதன் தன்மையில் தேசிய அபிவிருத்தி என்பது சாத்தியப்படும். குறிப்பாக, சாதாரண மக்களும் அபிவிருத்தியில் உள்ளீர்க்கப்படாவிட்டால் சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு உட்பட்டு அதன் கட்டமைப்பு சீர்குலைந்து அபிவிருத்தி என்பது கேள்விக்குறியாகின்றது.

இதனையே பேராசிரியர் கூலட் என்பவரால் முன்வைக்கப்பட்ட மூன்று முக்கிய பெறுமானங்களின் அடிப்படையில் விளங்கிக் கொள்ள முடியும் அவையாவன,

### 1.வாழ்வாதாரம்

வாழ்வாதாரமென்பது தனிநபர் அல்லது குடும்பம் தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருளாதார மற்றும் சமூக நடத்தைகளின் ஒருங்கிணைந்த அமைப்பாகும். இது கல்வி, வேலை வாய்ப்பு, வளங்கள், திறன்கள் மற்றும் சமூக ஆதரவு போன்றவற்றைக் கட்டமைப்பாக கொண்டது. சாதாரண மக்களும் அபிவிருத்தியில் உள்ளீர்க்கப்படாதபோது, அவர்கள் புறக்கணிக்கப்பட்ட சமூகமாக கீழநிலைப்படுத்தப்படுகின்றார்கள் அங்கு வேலையின்மை உச்சக்கட்டம் அடைய வறுமை நிலைப்பெறுகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக,

1945 காலப்பகுதி இலங்கையில் இலவச கல்வி கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய ரீதியாக நடைமுறைப்படுத்தப்பட்டாலும் மலையகப் பகுதி மக்களுக்குப் புறக்கணிக்கப்பட்டதாகவே காணப்பட்டது. பிற்பட்ட காலப்பகுதியிலே இலவச கல்விக்கான வாய்ப்பு மலையக பிரதேசத்தை வந்தடைகிறது. ஆனாலும், இன்று வரை அது முழுமை அடையாமல் காணப்படுகின்றமை கவலைக்குரியதாகும். இவ்வாறு சரியான கல்வி கிடைக்கப் பெறாத தன்மையிலே அந்த சமூகத்தில் மக்களின் வாழ்வாதாரம் பாதிப்படைந்த தன்மையாலே அடிப்படை வசதிகளைப் பெறமுடியாத சமூகமாக அடையாளப்படுத்தப்படுகின்றார்கள். இவ்வாறான ஒரு நிலை இருக்கும் பொழுது அபிவிருத்தி என்பது எவ்வாறு நிலைபெறுமென்பது கேள்விக்குறியாகின்றது. ஒரு நாட்டினுடைய அனைத்து மக்களின் வாழ்வாதாரமும் மேம்பாடடையும்போதே அபிவிருத்தி என்பது சாத்தியப்படும்.

### 2.சுயமரியாதை

சுயமரியாதை என்பது ஒருவரின் ஆளுமை மதிப்பு, உரிமை, இன, கௌரவம் மற்றும் சமூகத்தில் சமத்துவமான நிலையைப் பெறும் உரிமையாகும். நல்ல வாழ்க்கையின் மையப்பெருமானங்களின் இரண்டாவது சுயமரியாதையும் முக்கியமானது. ஒவ்வொரு மக்களும் தங்களுக்குரிய சுய கௌரவத்தை எதிர்பார்க்கின்றனர். முதலாளி, தொழிலாளி என்ற தன்மையில் இல்லாமலும், இன ரீதியான பாகுபாடு இல்லாமலும் அபிவிருத்தி செயற்பாடுகள் உருவாக்கப்பட வேண்டியமை கட்டாயமானது. எந்தவொரு நபருக்கு சுயமரியாதை சமூகத்தில் கிடைக்கப்பெறுகின்றதோ அப்பொழுதே அவர்களுக்குரிய தேவைகளும் நிறைவு செய்யப்படுகின்றன.

மலையகத் தமிழர்கள் என்பது இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டு இலங்கையின் மத்திய மலைநாட்டுப் பகுதிகளில் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்கு பணியமர்த்தப்பட்ட மக்கள் குழுவாகும். இவர்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக இலங்கையில் வாழ்ந்தாலும், பல துறைகளிலும் பின்தங்கிய நிலையிலே அடையாளப்படுத்தப்படுகின்றார்கள். அவர்களுக்கான அங்கீகாரம் வழங்கும்பொழுதே அவர்கள் சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் மதிக்கப்படுவார்கள். இலங்கையில் பெருந்தோட்ட பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு அவர்களின் வாழ்க்கை நிலைமையை மதித்து அவர்களுக்கான வாய்ப்புகளை வழங்கும்போது, அவர்களது வாழ்வும் மேம்பாட்டையும். இதன் பொழுதே அபிவிருத்தி என்பது முறையாகக் கட்டி யெழுப்பப்படும். அப்போதுதான் அபிவிருத்தி என்பது முழுமையாக அவர்களுக்கு அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

### 3. அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரம்

அடிமைப்படுத்தப்பட்ட சமூகங்கள் தொடர்ச்சியாக அடிமைப்படுத்தப்பட்ட நிலையில் காணப்படுவதோடு, பொருளாதாரம் முதல் அவர்களின் வாழ்வாதாரம் வரை கீழ் நிலைப்படுத்தப்பட்ட தன்மையிலே எழுச்சி பெறுகின்றது. இவ்வாறான நிலையில், அபிவிருத்தியை எவ்வாறு நிலைநிறுத்த முடியும் என்பதில் சிக்கல் தன்மை நிலைபெறுகின்றது. அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரம் அடையாத சமூகத்திலும் சரி நாட்டிலும் சரி அபிவிருத்தி என்பது சாத்தியப்படாது. 200 வருட காலமாக அடிமை சமூகமாக அடையாளப்படுத்தப்படுகின்ற மலைய மக்கள் இன்று வரை அடிப்படை வசதிகள் அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். இவ்வாறானதொரு தன்மை சமூகத்தில் காணப்படுகின்ற பொழுது “இலங்கை எவ்வாறு அபிவிருத்தி அடையும்? அவர்களுடைய வாழ்க்கைத் தரமும் ஏனைய மக்களுடைய வாழ்க்கைத் தரமும் சமநிலையடையும். ஆகவே, இவ்வாறு அபிவிருத்தி என்ற தன்மையில் ஒரு ஏற்றத்தாழ்வு இல்லாமல் சமச்சீர் ஆன தன்மை உருவாகும் என்பதில் ஒரு சிக்கல் காணப்படுகிறது."

எனவே, பேராசிரியர் கூலட்டின் மூன்று பெறுமானங்களின் தன்மையில் அபிவிருத்தி என்பது நிலைபெற வேண்டுமாயின் வாழ்வாதாரம்,சுயமரியாதை மற்றும் அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரம் ஆகிய மூன்றும் உயர்வடையும் பொழுதே அங்கு அபிவிருத்தி என்பது சாத்தியப்படும். இவற்றில் வாழ்வாதாரம் கீழ்நிலை அடைந்து ஏனைய இரண்டும் உயர்வடைந்தாலும் அல்லது சுயமரியாதை உயர்வடைந்து ஏனைய இரண்டும் கீழ்நிலை அடைந்தாலும் அங்கு அபிவிருத்தி என்பது சாத்தியப்படுவதில்லை. எனவே, அபிவிருத்தி என்பது அனைவருக்கும் சமமான பார்வையிலேயே உள்வாங்கப்பட வேண்டும்.


அபிவிருத்தி என்பது வெறுமனே பொருளாதார வளர்ச்சி அடிப்படையினால் மட்டுமே அளக்கக்கூடிய ஒன்றல்ல. மாறாக, இது மக்களின் முழுமையான வாழ்வாதாரம், சுயமரியாதை மற்றும் அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரம் போன்ற மூன்று முக்கியமான கூறுகளின் அடிப்படையில், கட்டியெழுப்பப்பட வேண்டிய ஓர் உயர்ந்த சமூக செயற்பாடாகும் என்பதை பேராசிரியர் கூலட் மிகத் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

ஒரு சமூகத்தில் மக்கள் தங்களது அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை, தங்களுக்குரிய உரிமைகளில் புறக்கணிக்கப்படுதல் மற்றும் சுதந்திரமற்ற நிலையில் வாழும்போது, அங்கு எவ்வகையான பொருளாதார முன்னேற்றமும் ‘அபிவிருத்தி’ என்ற பதத்தைப் பெறலாகாது. எனவே, அபிவிருத்தி என்பது முழுமையான மனித முன்னேற்றமாகும்.

---

## பின்லாந்து நாட்டின் கல்விமுறைமையும்

# இலங்கை பெற்றுக்கொள்ள கூடிய முன்மாதிரிகளும்





சிவசாமி மனோகரன்,
ஓய்வு நிலை சிரேஷ்ட
விரிவுரையாளர்,
தேசிய கல்வியியற் கல்லூரி.

உலகிலே கல்வியில் முன்னணி வகிக்கும் நாடான பின்லாந்து வடக்கு ஐரோப்பாவில் அமைந்துள்ளதொரு கிழக்கு ஸ்கெண்டினேவிய நாடாகும். வுடக்கில் நோர்வேஇ கிழக்கில் ரஷ்யா, மேற்கில் பொத்னியா வளைகுடா மற்றும் தெற்கில் பின்லாந்து வளைகுடா என்பன இதன் நாற்புற எல்லைகளாகும். இந்நாட்டின் மொத்த பரப்பளவு 338, 455 சதுர கிலோ மீற்றர்களாகும். மக்கள் தொகை 5.6 மில்லியனாகும். ஐரோப்பாவிலே அதிகளவான காடுகளைக் கொண்டுள்ள இந்நாட்டிலே 70 சதவீதத்துக்கும் மேற்பட்ட நிலப்பரப்பிலே காடுகள் காணப்படுகின்றன.

இயற்கை வனப்புமிக்க இந்நாட்டிலே அண்ணளவாக 188, 000 ஏரிகள் காணப்படுகின்றன. பின்லாந்தின் கடலோர சூழலை வளமாக்கும் வகையிலே 70, 000இற்கும் மேற்பட்ட தீவுகள் அமைந்துள்ளன. இந்த புவியியல் அம்சங்கள்பின்லாந்தின் இயற்கை வளங்களையும் சுற்றுப்பறச் சூழலையும் பிரதிபலிப்பதோடு நாட்டின் சுற்றுலா மற்றும் வாழ்வாதாரத்தற்கு முக்கிய பங்கு வகிக்கின்றன.

உலகிலே சிறந்த கல்விமுறையைப் பின்பற்றும் நாடாகவும் மிகவும் மகிழ்ச்சிகரமான நாடாகவும் பின்லாந்து கருதப்படுகிறது. இதற்கான காரணங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

### கல்வி ஆரம்பம் மற்றும் கல்விக் கட்டமைப்பு:

பின்லாந்து நாட்டிலே பிள்ளைகள் 7 வயதிலேயே தமது பாடசாலைக் கல்விக்குள் பிரவேசிக்கின்றனர். அதற்கு முன்னர் சுதந்திரமான கற்றல் சூழல் வழங்கப்படுகிறது. பாடசாலைகளிலே போட்டிகளற்ற கற்றற் சூழல் நிலவுகிறது.ஒத்துழைப்பும் ஊக்குவிப்பும் முறையாக வழங்கப்படுகின்றன.

சமத்துவமான கல்வி முறை:

பின்லாந்து கல்வி முறையில் அனைத்து மாணவர்களுக்கும் சமூகப்பின்னணி, பிராந்திய வேறுபாடு இல்லாமல் ஒரே தரமான கல்வி வழங்கப்படுகிறது. இது கல்வியில் சம உரிமையை வலியுறுத்துகிறது.

### மாணவர்களின் சுயமான கற்றல்:

மாணவர்கள் தமது சொந்த கற்றல் நடவடிக்கைகளில் பங்கேற்று குழுக்களில் இணைந்து செயற்படுகிறார்கள். ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இடையேயான நம்பிக்கையான தொடர்பு நிலவுகிறது. செயற்பாடுகளின் போதுமாணவர்களது சுய மதிப்பீடு முக்கியத்துவம் பெறுகிறது.

### குறைந்த அளவிலான பரீட்சைகள் மற்றும் அழுத்தம் இல்லாத கற்றல் சூழல்:

இங்கு பரீட்சைகள் குறைவாகவும் மாணவர்களைத் தரப்படுத்தல் முறைகள் தனிப்பட்ட முறையில் இடம்பெறுவதாலும் மாணவர்கள் எவ்விதமான அழுத்தங்களும் இன்றி கற்றுக் கொள்ளக் கூடிய சூழல் உள்ளது.

### ஆசிரியர்களின் உயர்ந்த மதிப்பு:

பின்லாந்திலே ஆசிரியர் பணிக்கு மிகுந்த சமூகக் கௌரவம் வழங்கப்படுகிறது. சிறந்த ஆசிரிய மாணவர்களே ஆசிரியர் பயிற்சிக்கு தெரிவு செய்யப்படுகின்றனர். அரசு கல்விக் கொள்கைகளில் ஆசிரியர்களுக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது.

### மகிழ்ச்சிகரமான பிள்ளைகள்:

ஐக்கிய நாட்டு தாபனத்தின் உலகின் மகிழ்ச்சிகரமான நாடுகள் பற்றிய அறிக்கையில் பின்லாந்து தொடர்ந்து முதலிடம் பெற்று வருகிறது. இங்கு பாடசாலைகளில் நிலவுகின்ற மகிழ்ச்சிகரமான சூழல் மாணவர்களின் ஆர்வத்தையும் கல்வி கற்கும் திறனையும் மேம்படுத்துகிறது.

உயர்ந்த வாழக்கைத் தரம் மற்றும் தொழில் வாய்ப்புக்கள்:

பின்லாந்து நாட்டிலே கல்வித் தரம் மட்டுமன்றி, வாழ்வாதாரமும் உயர்நிலையில் காணப்படுகிறது. பின்லாந்திலே கல்வி கற்பதற்கு சர்வதேச மாணவர்களிடையே போட்டி நிலவுகிறது. காரணம் தரமான கல்வியும் தொழிலுக்கான வழிகாட்டலும் தொழில் வாய்ப்புக்களும் தாராளமாக இங்கு கிடைக்கின்றன.

இதனால் பின்லாந்தின் கல்வி முறையானது உலகிலேயே சிறந்ததாகப்போற்றப்படுகிறது. ஏனெனில், சமத்துவம், மாணவர் மையமான கற்றல் சூழல், குறைந்த அழுத்தம், சிறந்த ஆசிரியர் மதிப்பு மற்றும் உயர்ந்த வாழ்க்கைத் தரம் ஆகியனவற்றை இந்நாட்டின் கல்வி முறையானது ஒருங்கிணைத்துள்ளது.

பின்லாந்து நாட்டின் கல்வி முறை ஏன் உலகின் சிறப்பான கல்விமுறையாக விளங்குகிறது. இதிலிருந்து இலங்கைப் பெற்றுக் கொள்ளக்கூடிய முன்மாதிரிகள்யாதென நாம் சிந்திப்பதனூடாக எமது நாட்டின் கல்வி முறைமையில் பொருத்தமான மாற்றங்களை விதந்துரைப்பதற்கு இது வழிகாட்டும் என நான் எதிர்பார்க்கிறேன்.

பின்லாந்து நாட்டிலே கட்டாயக் கல்வி முறைமைக் காணப்படுவதோடு இது முழுமையாக இலவசமாக வழங்கப்படுகிறது. இங்கு 7 வயது தொடக்கம் 16 வயது வரை கல்வி கட்டாயமானதாகும்.

அதேவேளை, அரச பாடசாலைகளில் கல்வி முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது. இங்கு தனியார் பாடசாலைகள் எதுவும் இல்லை. கல்வியானது முற்றுமுழுதாக அரச கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இலங்கையிலே இலவச கட்டாயக் கல்விமுறைமை ஒன்று காணப்பட்டாலும் கல்வி முறைமையானது படிப்படியாக அரச கட்டுப்பாட்டிலிருந்து நழுவிப் போகின்ற நிலைமைகளும் காணப்படுகின்றன. அதேவேளை, தனியார் பாடசாலைகளின் ஆதிக்கம் மேலோங்கக் கூடிய நிலைமைகள் தோன்றியுள்ளன. எனவே, பின்லாந்து நாட்டிலே கல்விமுறைமையை நடைமுறைப்படுத்தும் விதத்தினை முன்மாதிரியாகக் கொண்டு இலங்கையிலும் கல்வியை வழங்கும் முழுப் பொறுப்பினையும் அரசு ஏற்றுக் கொண்டு செயற்படுமிடத்து இலங்கையின் கல்வி முறைமையில் படிப்படியான விருத்தியை எதிர்பார்க்கலாம்.

பின்லாந்திலே மாணவர்கள் மதிப்பீட்டுப் புள்ளிகள் அடிப்படையில், ஒருவருடன் ஒருவர் ஒப்பிடப்படுவதில்லை. ஒவ்வொரு மாணவரதும் தனித்திறமைகள் மற்றும் ஆர்வங்களை அடிப்படையாகக் கொண்டே கற்றல் முறைகள் அமைக்கப்படுகின்றன. திறன் விருத்தியை நோக்காகக் கொண்டே கணிப்பிடல் மற்றும் மதிப்பிடல் பணிகள் இடம்பெறுகின்றன. போட்டிமுறையிலான பரீட்சை முறைமைகள் அங்கு இல்லை. எனவே, கல்வியில் சமத்துவம் மற்றும் சமூக நீதிபேணப்படுகிறது. இலங்கையின் தற்போதைய கல்வி முறைமையிலே போட்டி முறைமையிலான பரீட்சை முறைகள் ஆதிக்கம் செலுத்துகின்றன. கல்வியிலே உள்ளீர்த்தல் தொடக்கம் வேலை வாய்ப்பு வரை போட்டித் தன்மையான மதிப்பிடலும் செயன்முறைகளுமே பின்பற்றப்படுகின்றன. எனவே பின்லாந்து நாட்டின் கணிப்பிடல் மதிப்பிடல் முன்மாதிரிகளை இலங்கையின் கல்வி முறைமையில் பின்பற்றுமிடத்து கல்வியிலே நல்லதொரு மாற்றத்தை தோற்றுவிக்கலாம்.

மேலும் பின்லாந்து நாட்டின் கல்வி முறைமையிலே மாணவர்கள் இடையிலே போட்டித்தன்மை நிலவுவதில்லை. இங்கே மாணவர்கள் குழுவாகவும் ஒத்துழைப்புடன் இணைந்தும் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடும் வகையிலேயே கற்றல் செயன்முறைகள் இடம்பெறுகின்றன. கற்பித்தலை விட கற்றலுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. மாணவர்கள் குழுவாகவும் இணைந்தும் கற்றல் செயன்முறைகள் ஈடுபடுவதனால் பல்வேறு சமூகத் திறன்கள் அவர்களிடையே விருத்தியடைகின்றன. மாணவர்களுக்கு வீட்டுப்பாடம் வழங்கப்படுவதில்லை.

இங்கு மாணவனது கற்றல் வேகத்துக்கு ஏற்ப கற்றல் சாத்தியமாக்கப்பட்டுள்ளது. இது மாணவனது தனியாள் திறனை விருத்தி செய்வதற்கு உதவுகிறது. சுதந்திரமான கற்றல் நிலைமைகள் காணப்படுவதனால் குடும்பத்துடன் மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழிப்பதற்கும் நன்றாக உறங்குவதற்கும் உடற்பயிற்சி செய்வதற்கும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. இவை கல்வி விருத்திக்கான முக்கிய அம்சங்களாகக் கருதப்படுகின்றன. ஆனால், இலங்கையின் தற்போது நடைமுறையில் உள்ள கல்வி முறையிலே ஓய்வு நேரப் பயன்பாடு மற்றும் விளையாட்டு என்பனவற்றை பாடசாலைக் கலைத்திட்டத்திலே தேர்ச்சிகளாக்கி வழங்கி வருகிறோம்.

(திங்கட்கிழமை தொடரும்)

லாகூர்

பாகிஸ்தானில் கனமழை, வெள்ளம்

# பலி எண்ணிக்கை 750 ஆக உயர்வு

## பலி எண்ணிக்கை அதிகரிக்கும் என அச்சம்

பாகிஸ்தானில் கடந்த சில நாட்களாக பருவமழை தீவிரமடைந்து வருகிறது. குறிப்பாக, அந்நாட்டின் கைபர் பக்துவா, சிந்து, பஞ்சாப் ஆகிய மாகாணங்களில் கனமழை வெளுத்து வாங்கி வருகிறது. மேலும், பல பகுதிகளில் மேகவெடிப்பு ஏற்பட்டு கனமழை கொட்டித்தீர்த்துள்ளது.

கனமழையால் பல்வேறு ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அதேவேளை, கனமழை, வெள்ளத்தில் உயிரிழப்பு சம்பவங்களும் அரங்கேறி வருகின்றன.



இந்நிலையில், பாகிஸ்தானில் பெய்துவரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 750 ஆக அதிகரித்துள்ளது. மேலும், கனமழை , வெள்ளத்தில் 1,000க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

அதேவேளை, கனமழை, வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் தேசிய பேரிடர் மீட்புக்குழுவினர், ராணுவம் களமிறக்கப்பட்டுள்ளது. கனமழை தொடர்ந்து பெய்வதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று அஞ்சப்படுகிறது.



இன்று இரண்டாவது போட்டி

# போட்டித் தொடரைத் தக்க வைக்குமா அவுஸ்திரேலியா?

அவுஸ்திரேலிய, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியானது இன்று காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை தென்னாபிரிக்கா வென்ற நிலையில், தொடரைத் தக்க வைப்பதற்கு இப்போட்டியில் அவுஸ்திரேலியா கட்டாயம் வென்றாக வேண்டிய நிலையிலுள்ளது.

முதலாவது போட்டியில் சுழற்பந்துவீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்திய நிலையில் இப்போட்டிக்கான ஆடுகளம் கவனம் பெறுகின்றது. எனினும் இது துடுப்பாட்டத்துக்கு சாதகமானதாக இருக்குமென்றே நம்பப்படுகின்றது.

அந்தவகையில் மர்னுஸ் லபுஷைன், கமரன் கிறீன், ஜொஷ் இங்லிஸ் உள்ளிட்டவர்களிடமிருந்து பொறுப்பான இனிங்ஸ்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆரோன் ஹார்டிக்குப் பதிலாக கூப்பர் கொனோலி அணியில் இடம்பெறக்கூடிய வாய்ப்புகள் காணப்படுவதுடன், ஜொஷ் ஹேசில்வூட்டை ஸ்கேவியர் பார்ட்லெட் பிரதியிடக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

மறுபக்கமாக பிரெனெலன் சுப்ராயனின் பந்துவீச்சுப்பாணி குறித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் அவரை செனுரன் முத்துசாமி அல்லது கொர்பின் பொஷ் அணியில் பிரதியிடக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

வொஷிங்டன்

அமெரிக்காவின்

# அரச ஊழியர்கள் 600 பேர் பணிநீக்கம்




அமெரிக்காவின் சிடிசி (CDC) எனப்படும் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்களின் ஊழியர்கள் 600 பேர் நிரந்தரமாக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அமெரிக்க அரசாங்க பணியாளர் கூட்டமைப்பு (AFGE) வெளியிட்ட அறிக்கையின்படி, சி.டி.சி.-யில் 2,000-க்கும் அதிகமான உறுப்பினர்களை ஏஎப்ஜிஇ பிரதிநிதித்துவப்படுத்துகிறது. தற்போது, 600 பணியாளர்கள் நிரந்தர பணிநீக்கம் செய்யப்படுகின்றனர். இது தொடர்பான அறிவிப்புகள் இந்த வாரம் வழங்கப்பட்டு வருகின்றன. பலர் அதனை இன்னும் பெறவில்லை என தெரிவித்துள்ளது.

சுகாதார நிறுவனங்களை மிகவும் கவனத்துடனும், திறமையாகவும் மாற்றுவதற்காகவே மறுசீரமைப்பு மற்றும் ஆட்குறைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அமெரிக்க சுகாதார மற்றும் மனித சேவை துறை ஏற்கெனவே அறிவித்திருந்தது. ஆனால், தற்போது ஆட்குறைப்பு நடவடிக்கையால் பாதிக்கப்பட்டவர்களின் விபரம் பற்றி ஏதும் வெளியிடவில்லை.

சி.டி.சி. வளாகத்தில் ஒரு நபர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் ஒரு பொலிஸ் அதிகாரி உயிரிழந்த சம்பவத்தை தொடர்ந்து, வன்முறைத் தடுப்புத் துறையில் பணிபுரிந்த 100 பேர் உட்பட 600 பேர் மீது பணிநீக்க நடவடிக்கை பாய்ந்துள்ளது.

வொஷிங்டன்

உக்ரைன் பாதுகாப்புக்கு

# ஐரோப்பிய நாடுகளே பொறுப்பேற்க வேண்டும்



உக்ரைன் பாதுகாப்புக்கான பொறுப்பை இனி ஐரோப்பிய நாடுகள் தான் சுமக்க வேண்டியிருக்கும் என்று அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி.வான்ஸ் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிடமிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ள அமெரிக்கா, மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சார்ந்துள்ளது உக்ரைன். மூன்றரை ஆண்டுகளாக போர் நீடிக்கும் நிலையில், இனி உக்ரைனுக்கு வான்வழி பாதுகாப்பில் மட்டுமே உதவி என்று ஜனாதிபதி ட்ரம்ப் திட்டவட்டமாக தெரிவித்து விட்டார்.

கீவ் (உக்ரைன் தலைநகர்) பாதுகாப்புக்காக இனியும் அமெரிக்கா 'பிளாங் செக்' எழுதிக் கொண்டிருக்காது என்று தெரிவித்து விட்டார். இனி ஐரோப்பிய கூட்டாளிகள் தான் உக்ரைன் பாதுகாப்புக்கான சுமைகளை பெருமளவில் சுமக்க வேண்டும் என்ற முடிவுக்கும் ட்ரம்ப் வந்து விட்டார் என வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், ஐரோப்பிய நாடுகளும் ஒரு கூட்டமைப்பை உருவாக்கியுள்ளன. அதில், உக்ரைனுக்கு ஆயுத உதவி செய்ய விரும்பும் நாடுகள் இணையலாம் என்று தெரிவித்துள்ளது.

இந்தச் சூழலில் புதன்கிழமை (20) அன்று ஃபாக்ஸ் நியூஸ் செய்தி சேனலுக்குப் பேட்டியளித்த அமெரிக்க துணை அதிபர் ஜேடி வான்ஸ், "போரின் சுமையை முழுக்கமுழுக்க நாங்களே சுமக்கத் தேவையில்லை என்று நினைக்கிறேன். இதில் ஐரோப்பா தான் பிரதானமான பங்குதாரராக இருக்க வேண்டும் என்பதில் அதிபர் ட்ரம்ப் தெளிவாக இருக்கிறார். இனி என்ன நடந்தாலும் ஐரோப்பிய நாடுகள் தான் உக்ரைன் பாதுகாப்பில் பெரும் பங்கை சுமக்க வேண்டும். உக்ரைன் ஐரோப்பிய கண்டத்தில்தான் உள்ளது. எனவே அது அவர்களின் பாதுகாப்பும் சார்ந்தது" என்றார்.

# மட்டக்களப்பு இளம் கிரிக்கட் வீரர்களுக்கு கிரிக்கட் உபகரணங்கள்

**கனகராசா சரவணன்**

இலங்கை கிரிக்கட் சபையும், இலங்கை பாடசாலை கிரிக்கட் சங்கமும் இணைந்து நாடு முழுவதும் இளம் கிரிக்கட் வீரர்களுக்கு கிரிக்கட் உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்ட பாடசாலைகள், பாடசாலை மாவட்ட அணிகள், மாவட்ட பயிற்சியாளர்கள், மாவட்ட கிரிக்கட் சங்கங்களுக்கு புதன்கிழமை (20) அன்று உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சர் தலைமையில் கொழும்பில் உள்ள டன்சன் வெள்ளை அரங்கில் நாடளாவிய ரீதியில் 24 மாவட்டங்களிலும் ஒரே நேரத்தில் உபகரணங்கள் வழங்கும் விழாவினையடுத்த மட்டக்களப்பு கிரிக்கட் சங்கம் கிழக்கு மாகாண கிரிக்கட் சங்கத்தின் தலைவர் எம்.



பி.ரஞ்சன், செயலாளர் விவேகானந்தராஜா பிரதீபன் தலைமையில் உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வானது மண்முனை பிரதேச செயலக டேபா மண்டபத்தில் இடம்பெற்றது.

முழங்கால் காயத்தால்

# போட்டிகளைத் தவற விடப் போகும் ஹவேர்ட்ஸ்

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான ஆர்சனலின் முன்களவீரரான கை ஹவேர்ட்ஸுக்கு முழங்கால் காயமொன்று ஏற்பட்டதையடுத்து, போட்டிகளைத் தவறவிடவுள்ளாரெனக் கூறப்படுகிறது.

புதன்கிழமை (20) அன்று பயிற்சியை 26 வயதான ஹவேர்ட்ஸ் தவறவிட்ட நிலையில் அவரது காயம் எவ்வளவு பாரதூரமானதென தெளிவில்லாமலுள்ளது.

ஏற்கெனவே கப்ரியல் ஜெஸூஸும் காயமடைந்துள்ள நிலையில் விக்டர் யோக்கிரிஷ் மாத்திரமே முன்களவீரராகக் காணப்படுகின்றார்.

அந்தவகையில் முன்களவீரரொருவரை கைச்சாத்திட ஆர்சனல் முயலுமென எதிர்பார்க்கப்படுகிறது.



புதுடெல்லி

# இந்தியாவில் 1.07 கோடி பேருக்கு குடும்பக் கட்டுப்பாடு

கடந்த 1975 முதல் 1977 வரையிலான அவசரநிலை காலத்தில் அப்போதைய இந்திரா காந்தி அரசின் அத்துமீறல்கள், முறைகேடுகள் குறித்து நீதிபதி ஷா ஆணையம் விசாரணை மேற்கொண்டது. அதன் அறிக்கை பாராளுமன்றத்தில் 1978ஆம் ஆண்டு ஒகஸ்ட் 31ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்டது.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அமல்படுத்தியதில் பலத்தை பிரயோகித்தது குறித்தும் அதன் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இது தொடர்பான விவரத்தை மக்களவையில் உள்துறை இணை அமைச்சர் நித்யானந்த் ராய் பகிர்ந்து கொண்டார்.

இது தொடர்பாக அவர் எழுத்துமூலம் அளித்த பதிலில் கூறியிருப்பதாவது: அவசரநிலை காலத்தில் 1.07 கோடிக்கும் மேற்பட்டோருக்கு



குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது, இது அப்போதைய இந்திரா காந்தி அரசு நிர்ணயித்த இலக்கை விட 60% அதிகமாகும்.

அப்போது குடும்பக் கட்டுப்பாடு தொடர்பாக 1,774 பேர் இறந்துள்ளனர். திருமணமாகாதவர்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு செய்யப்பட்டதாக 548 புகார்கள் வந்துள்ளன.

அவசரநிலை காலத்தில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்துக்கு ஆண்டு இலக்குகளை மாநிலங்களுக்கு மத்திய அரசு நிர்ணயித்தது. 1975-76இல் 24.8 இலட்சம் அறுவை சிகிச்சைக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

ஆனால் 5.6% கூடுதலாக, அதாவது 26.2 இலட்சம் பேருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. இதுபோல் 1976-77இல் 42.5 இலட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 91% அதிகமாக (81.3 இலட்சம்) அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன என அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

சந்தேகத்துக்குரிய பந்துவீச்சுப் பாணி

# சுப்ராயன் மீது முறைப்பாடு

அவுஸ்திரேலியாவுக்கெதிரான முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியைத் தொடர்ந்து தென்னாபிரிக்காவின் சுழற்பந்துவீச்சாளர் பிரெனெலன் சுப்ராயனின் பந்துவீச்சுப் பாணியானது சந்தேகத்துக்குரியதென முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த போட்டியில் 10 ஓவர்கள் வீசிய சுப்ராயன் 46 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து ட்ரெவிஸ் ஹெட்டின் விக்கெட்டைக் கைப்பற்றியிருந்தார்.

இந்நிலையில் சர்வதேச கிரிக்கெட் சபையால் அனுமதிக்கப்பட்ட சோதனை நிலையமொன்றில் 14 நாள்களுக்குள் சுப்ராயன்ஹ் தனது பந்துவீச்சுப்பாணியை சுயாதீன மதிப்பீட்டுக்குள்ளாக்க வேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது. சோதனை முடிவுகள் வரும் வரையில் அவர் தனது பந்துவீச்சை தொடர முடியும்.

முன்னதாக 2012ஆம் ஆண்டில் சுப்ராயனின் பந்துவீச்சுப் பாணி விதிகளுக்கு முரணானதென கண்டுபிடிக்கப்பட்ட நிலையில், 2013ஆம் ஆண்டு பந்துவீச்சுப்பாணியை மாற்றி மீள சோதனை செய்யப்பட்ட பின்னரே பந்துவீச



அனுமதிக்கப்பட்டிருந்தார். 2014ஆம் ஆண்டு சம்பியன்ஸ் லீக்கிலும், 2015ஆம் ஆண்டு உள்ளூர் இருபதுக்கு 20 போட்டியிலும் சுப்ராயனின் பந்துவீச்சுப்பாணி குறித்து முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் பந்துவீசத் தடை விதிக்கப்பட்டிருந்தார். பின்னர் 2016ஆம் ஆண்டு இரண்டாவது தடவையே சோதனையில் சுப்ராயன் தேறியிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 22, ஒகஸ்ட் 2025, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.